Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 04 சனிக்கிழமை (18.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 230













# 13 ஆவது திருத்தத்தில் கை வைக்க வேண்டாம்



## அரசுக்கு புதுடில்லி ஆலோசனை



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இப்போதைக்கு மாற்றங்கள் எதனையும் செய்ய வேண்டாம் என்று அரசுக்கு புதுடில்லியில் இருந்து ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷித், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கு தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி இவ்விடயம் குறித்து இருவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

மாகாணசபைகளின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக குர்ஷித் தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கமே நிறைவேற்ற வேண்டும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதாகவே அரசாங்கம்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் இந்திய முதலீடு இனி இரு மடங்காகும்

(கொழும்பு)

ஆசியாவிலேயே வர்த்தக முக்கியத்துவம் இலங்கைக்கு இப்போது அதிகரித்து வருவதால் அங்கு இந்திய வர்த்தக முதலீட்டை இரு மடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 100 கோடியை இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. 2012 ஆம் ஆண்டு மட்டும் 16 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 200 கோடி மதிப்பிலான முதலீடுகள் செய்ய இந்திய நிறுவ

19 ஆம் பக்கம் பார்க்க

## முதலீட்டு ஊக்குவிப்பு மையங்கள் கொழும்பில் ஸ்தாபிக்க முடிவு

(கொழும்பு)

சர்வதேச நாடுகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு இப்போது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும், இதற்காக விசேட முதலீட்டு ஊக்குவிப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதையடுத்து முதலீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது பல்வேறு முதலீடுகளுக்காக முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு பெரும் எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தாய்வான், நெதர்லாந்து, அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வத்துடன் காணப்படுகின்றனர். அவர்கள் தமது விண்ணப்பங்களை முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கு அனுப்பி வைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த ஆண்டு வாக்காளர் இடாப்பின்படியே

### பிரதித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே நடைபெறும் என்றும் இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 721, 488 பேர் தகுதியுடையவர்களாக உள்ளனர் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முகமட் தெரிவித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் படி யாழ். மாவட்டத்தில் 4 இலட்சத்து 26 ஆயிரத்து 703 வாக்காளர்களும், மன்னார் மாவட்டத்தில் 70 ஆயிரத்து 85 வாக்காளர்களும், வவுனியா மாவட்டத்தில் 96 ஆயிரத்து 702 வாக்காளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 59 ஆயிரத்து 409 வாக்காளர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68ஆயிரத்து 584 வாக்காளர்களுமாக மொத்தம் 7 இலட்சத்து 21 ஆயிரத்து 488 பேர்வாக்காளர்களாக பதிவு செய்துள்ளனர்.

யுத்த காலப்பகுதியல் உயிரிழந்த மற்றும் காணாமல் போனவர்கள், மற்றும் புலம்பெயர் தேசத்தில் இருந்தவர்களது பெயர் விபரங்களும் ஒவ்வொரு வருடமும் மீண்டும் மீண்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

## தடம்புரண்டது இராணுவ வாகனம் ஒருவர் மரணம், 18 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினரின் கனரக லொறியொன்று தடம்புரண்டதில் இராணுவ வீரர் ஒருவர் பலியானதுடன், 18 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த 18 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையிலும், ஏனை

19 ஆம் பக்கம் பார்க்க

## குடும்பத்துடன் தற்கொலை முயற்சி; மூன்று குழந்தைகள் மரணம்

### உயிர் தப்பினார் தாய்


மனநலம் பாதிப்படைந்ததாகக் கூறப்படும் தாயொருவரால் அவரது மூன்று பெண் பிள்ளைகளும் கிணற்றில் வீசப்பட்டுக் கொலை செய்ததாகக் கூறப்படும் சம்பவமொன்று வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது குழந்தைகளைக் கிணற்றில் வீசிய மேற்படி தாய், பின்னர் தானும் கிணற்றில் குதித்துள்ள போதும், அவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாண்டிக்குளம் பாடசாலை வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து அழுகுரல் கேட்பதை அடுத்து அயலவர்கள் நேற்றுக் காலை ஓடிச்சென்று அவ்வீட்டின் கிணற்றைப் பார்த்தபோது தாயொருவர் மூன்று பிள்ளைகளை கிணற்றில் போட்டுவிட்டு தானும் கிணற்றில் வீழ்ந்து கிடந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்கள் உடனடியாக தாயாரை மீட்டெடுத்துள்ளனர். எனினும், வி. லதுர்சிகா (வயது-6) சன்சிகா (இரண்டரை வயது ) மற்றும் நிதர்சிகா (ஒன்றரை வயது) ஆகிய மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துள்ளதை அவதானி

19 ஆம் பக்கம் பார்க்க



இறுதி யுத்தத்தில் மரணித்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

– தினமுரசு குடும்பம்

உள்ளே... தரம் 5 இற்கான புலமைப்பரிசில் மாதிரி வினைத்தாள்


# அரியாலையில் கள்ள மண் அகழ்வு குறித்து

# புவிசரிதவியல் அதிகாரிகள் ஆராய்வு

அரியால்ல கிழக்கில் இரவு பகலாக கள்ள மணல் ஏற்றுவது தொடர்பாக கொழும்பிலிருந்து புவிசரிதவியல் அளவை சுரங்கவியல் பணியக (GSMB) அதிகாரிகள் யாழ். வருகை தந்திருந்தனர். நேற்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வஜீகணேசா கிராம அலுவலர் சி.திருக்கேதீஸ்வரன் மற்றும் யாழ். புவிசரிதவியல் சுரங்கம் கள உத்தியோகத்தர் நடேஸ்வரன் மற்றும் கொழும்பு புவிசரிதவியல் அளவை சுரங்க அதிகாரிகளான பிரதம பொறியியலாளர் அசெல பெனார்ண்டோ உள்ளக கணக்காளர் சந்திரசேன வியனகே ஆகியோருடன் சந்திப்பு ஒன்று அரியாலை கிழக்கில் கள்ள மணல் ஏற்றும் இடத்தில் நடைபெற்றது.

இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் கருத்து தெரிவிக்கையில் இவ்விடயத்தில் கள்ள மண் ஏற்றுவது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் அரியாலை கிழக்கில் நடைபெற்ற கூட்டத்தில் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டார். அரியாலை கிழக்கில் மணல் ஏற்றுவது தடைசெய்யப்பட்டதாகவும் அப்படி அத்துமீறி ஏற்றினால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அமைச்சர் கருத்து தெரிவித்த போது நல்லூர் பிரதேசசெயலர் பா.செந்தில்நந்தனன் உடனிருந்தார். இக் காணி மாலதி என்பவருக்கு சொந்தமான காணி 36 ஏக்கர் பரப்பளவு கொண்டது எனத் தெரிவித்தார். அத்தோடு முன்னாள் அரசாங்க அதிபர் என அழைக்கப்படும் செ.பத்மநாதன் என்பவருடைய காணியையும் சென்று பார்வையிட்ட போது பெரும்பாலானோர் மக்கள் கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகளை சந்தித்து தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். உடனடியாக இவருக்கு வழங்கப்பட்ட (பேர்மிட்) அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யுமாறு கேட்டுக்கொண்டனர்.




அவுஸ்ரேலியா சைவ மன்றத்தில் நடைபெற்ற மூன்று நாள் தொடர் சொற்பொழிவில் சைவமன்றச் செயலாளர் வைத்திலிங்கம் இலிங்கம் தலைமையுரையாற்றுவதையும், கலாநிதி ஆறு திருமுருகன் சொற்பொழிவு நிகழ்த்துவதையும் காணலாம்.

## 30 ஆண்டுகளுக்குப் பின் நெடுங்கேணியில் எரிபொருள் நிலையம்

நெடுங்கேணி பிரதேச மக்களின் நலன்கருதி 30 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நெடுங்கேணியில் எரிபொருள் நிலையம் வைபவரீதியாகப் பெற்றோலிய அமைச்சரினால் திறந்துவைக்கப்பட்டது.

நெடுங்கேணி விவசாயிகளின் நலன்கருதி இதுவரைகாலமும் நிலவிவந்த எரிபொருள் தட்டுப்பாட்டினை நிவர்த்திசெய்யும் வகையில் வைபவ ரீதியாகக் கடந்த 6 ஆம் திகதி பகல் 12.00 மணியளவில் நெடுங்கேணி எரிபொருள் நிலையத்தின் முகாமையாளர் ப.வ.லிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. இந் நிலையம் பெற்றோலியக் கூட்டுத்தாபன அமைச்சர் சரணகுன வர்த்தனவினால் திறந்து வைக்கப்பட்டதுடன் வாகனங்களுக்கும் எரிபொருள் வைபவரீதியாக வழங்கி வைத்தார். விருந்தினர்களாக நான்கு மதங்களுக்கும் உரிய மத குருமார்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை முகாமையாளர் சமிந்த சமரகோன், பெற்றோலியக் கூட்டுத்தாபன வடமாகாண முகாமையாளர் சன்முகநாதன், நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர். (40)

## யாழ்ப்பாண வாசிக்கு மோட்டார் சைக்கிள் பரிசு



எலிபன்ற் கவுஸ் குளிர்பானங்களின் மூடிகளில் வெளியான எழுத்துக்களில் 'ELEPHANT HOUSE' என்ற எழுத்துக்களைச் சேகரித்து அனுப்பி வெற்றியாளராக யாழ். வாசி ஒருவர் தெரிவு செய்யப்பட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பரிசாகப் பெற்றுள்ளார். யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகாலிங்கம் பிரதீபன் என்பவரே இவ்வாறு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்றைப் பரிசாகப் பெற்றுள்ளார். (இ)

## வர்த்தகர் திடீர் மாயம்

## வட்டிக்குக் கடன்கொடுத்தவர்கள் அவலம்

(திருநெல்வேலி)

கல்வியங்காட்டில் வர்த்தக நிலையம் ஒன்றை நடாத்தி வந்த வர்த்தகர் ஒருவர் பலரிடம் பல இலட்சம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொண்டு திடீரென்று தலைமறைவாகியுள்ளார்.

திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தந்தையான இவர் அந்தப் பகுதியில் வாடகை வீடு ஒன்றில் தங்கியிருந்ததோடு வர்த்தக நிலையத்தையும் வாடகைக்கே பெற்றிருந்தார். இந்நிலையில் இவர் திடீரென்று குடும்பத்துடன் தலைமறைவானார்.

இவரை நம்பிப் பலர் இலட்சக்கணக்கில் பணம் கடன்கொடுத்திருந்தார்கள். வட்டிக்கு ஆசைபட்டுப் பணம் கொடுத்தவர்கள் கடைசியில் வட்டியும் இல்லை, முதலும் இல்லை எனத் தெரிந்ததும் அதிர்ச்சியில் ஆழ்ந்து போயுள்ளனர்.

இரவிரவாகத் தனது வர்த்தக நிலையத்திலிருந்து பொருட்களை இவர் இரகசியமாகக் கொண்டுசென்றுள்ளார். இவருக்குப் பணம் கொடுத்தவர்கள் இவரது வீட்டுக்கும், வர்த்தக நிலையத்திற்கும் விரைந்து சென்று பார்த்தபோது அவை மூடப்பட்டிருப்பதைக் கண்டு செய்வதறியாது திகைத்துப்போயுள்ளனர். (137)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் மத்திய மின்நிலையத்திலுள்ள மின்பிறப்பாக்கிகளில் தொழில்நுட்ப பரிசோதனைகளை செய்யவேண்டியிருப்பதால் இன்று முதல் எதிர்வரும் (20.05.2013) திங்கட்கிழமை வரையான மூன்று நாட்களும் காலை 09.00 மணியிலிருந்து மாலை 06.00 மணி வரை வடமராட்சி, வடமராட்சியிலிருந்து சுன்னாகம் வரை, தென்மராட்சி, தென்மராட்சியிலிருந்து கரந்தன் வரையான பிரதேசங்கள் தவிர்ந்த யாழ். குடாநாட்டின் ஏனைய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளருக்கு தெரிவித்துக்கொள்கிறோம். இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக மின்சார சபை மனம் வருந்துகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 956

திகதி 16.05.2013

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

04 08 60 61 W

ஜக்பொட் பரிசு ரூ. 11,742,400/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 11,742,400/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 1,000,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 50,000/= | ரூ. 700,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 259 | 1,000/= | ரூ. 259,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 495 | 1,000/= | ரூ. 495,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12150 | 60/= | ரூ. 729,000/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6272 | 40/= | ரூ. 250,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 159090 | 20/= | ரூ. 3,181,800/= |
| ஆங்கில எழுத்து | 23158 | 20/= | ரூ. 463,160/= |
| | | மொத்தம் ரூ. | 7,078,840/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 74,78,840/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருக்கோணாமலை | 704166022-2-42 |
| கம்பஹா | 704174278-0-20 |
| இரத்தினபுரி | 704166177-9-09 |
| குருநாகல் | 704160421-8-48 |
| காலி | 704174992-8-28 |
| பதுளை | 704172275-6-16 |
| அநுராதபுரம் | 704174703-9-39 |
| மட்டக்களப்பு | 704171012-9-19 |

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 1,20,53,640/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.16 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

தொலைபேசி: 2 333546/7

(C/2754)


## மின்கட்டணம் செலுத்துவதில் வரணி மக்கள் ஆர்வம்

வரணிப் பிரதேசத்தில் தற்போது மின்பாவனை யாளர் மின் பட்டியல் கிடைத்தவுடன் (பெரும்பாலானோர்) உடனடியாகக் கட்டணத்தை வரணி தபால கத்தில் செலுத்துவதைக் காணமுடிகிறது கடந்த மாதம் நிலுவை அளவுக்கு (அதிக கட்டணமாக) பணம் செலுத்தத்தவறியவர்களுக்கு மின் துண்டிப்புக்குச் சிகப்பு கடிதம் அனுப்பியதால் மின் எப்படியும் துண்டிக்கப்படும் என்ற காரணத்தால் மாதாந்தம் பணத்தைச் செலுத்திவருகின்றனர். சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்ற நோக்கில் மாதாந்தம் பணத்தைச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்கினால் ஒருவருக்கும் இடையூறு ஏற்படாது என்று பணத்தைச் செலுத்துபவர்கள் தெரிவித்துள்ளனர். (150)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களிற்கான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் 2.00 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


## சிறுவிளம்பரங்கள்

### வாடகைக்குண்டு

சுன்னாகம் பஸ்நிலையத்திற்கு அருகில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொ.பே. 0212240405, 0778535599 (R/2755)


## செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைகாசிப் பெருவிழா

(வடமராட்சி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் வருடாந்த வைகாசிப் பெருவிழா நேற்று முற்பகல் 10.00 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை நிர்வாக உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெற்றது. இப்பெருவிழாவில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சார்ய சுவாமிகள் அருளுரையை வழங்கியதுடன் சதாவேல் மாறனின் மிருதங்கக் கச்சேரியும் இடம்பெற்றது. மேலும் உரும்பிராய் மாணவிகளின் நாட்டிய நாடக நிகழ்வு இடம்பெற்றதுடன் 63 நாயன்மார்களின் குருபூசையைத் தொடர்ந்து பெருவிழா இனிதே நிறைவுபெற்றது. (85)

# ஏகாதசி உற்சவம்

(குருநகர்)

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஏகாதசி தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை முடிவில் ஸ்ரீமத் நாராயண சுவாமி, ஸ்ரீதேவி பூமாதேவி சமேதரராய் அலங்காரத்தண்டிகையில் வீதியுலா எழுந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (68)

# போதனா வைத்தியசாலை தாதியர்களுக்கு விடுதி வசதியை ஏற்படுத்த நடவடிக்கை



## யாழ். மேலதிக அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ. போதனா வைத்திய சாலைத் தாதியர்களுக்கு விடுதி வசதியை ஏற்படுத்திக்கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதிவசதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முயற்சி மேற் கொண்டிருப்பதாக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி.ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக்கல்லூரியில் நடைபெற்ற உலக தாதியர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு குழந்தை பிறந்து இறக்கும்வரை அதற்கு கடமையாற்றவுள்ள தாதியர்களின் சேவை இறைபணிக்கு ஒப்பானது இந்தத் தாதியர் சேவைக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர் புளோரனஸ் நைற்றிங்கேள் அம்மையார் ஆவார்.

இதன் காரணமாக அவரது பிறந்த தினமாகிய மே 12 ஆம் திகதியை வருடாவருடம் உலக தாதியர்தினமாக சர்வதேச தாதியர் கவுன்சிலினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை, தாதியர்களுக்கான விடுதி பற்றாக்குறை என்பன தொடர்பில் வைத்தியசாலைப்பணிப்பாளர் மாவட்ட அபிவிருத்திக்குக் குழுக் கூட்டத்திலும் விசேட கூட்டங்களிலும் எடுத்துக்கூறி வருகிறார்.

அத்துடன் இந்த தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபரினால் கல்லூரிக்கும் ஒரு கடடடம் அமைதது தரும்படி அரச அதிபரிற்கு கோரிக்கை ஒன்றையும் தற்போது முன் வைத்துள்ளார்.

எனவே மிகவும் அத்தியாவசியமான இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்கு செயலகத்திடம் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து நிதிவசதியைப் பெற்று தாதியர்களுக்கான இந்த வசதிகளைச் செய்து கொடுக்க அரச அதிபர் ஆலோசித்து வருவதாகவும் தெரிவித்த மேலதிக அரச அதிபர் அடுத்த தாதியர் தினத்திற்கு முன்னர் தாதியர்களுக்கான விடுதி வசதியை ஏற்படுத்தித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.(பா,இ)

# மாணவர்களுக்கு சீருடை விநியோகம்

(வட.வரணி)

வடக்கு வரணி யாழ். சைவப் பிரகாச வித்தியாசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன.

அச் சீருடைத்துணிகள் பிரதான அனுசரணையாக மொரிஸ் சேரன்டஸ் ஜயதிலகவின் குடும்பத்தினரது பூரண ஒத்துழைப்புடன் எதிர்கால மாணவச் செல்வங்களுக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு அண்மையில் வரணி 52 ஆவது படைப்பிரிவில் பாதுகாப்பு செயலர் வருகை தந்து ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ஏனைய மாணவர்களுக்கு இச்சீருடைத் துணிகளை இராணுவத்தினர் வழங்கி வருகின்றனர். (150)

# புலோலி ப.நோ.கூ.சங்கத்திற்கு இரண்டு மில்லியன் கடனுதவி

(பருத்தித்துறை)

புலோலி பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கட்டட வசதிகளை மேம்படுத்தும் முகமாக 2 மில்லியன் ரூபாவைக் கடன் அடிப்படையில் வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி முன்வந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை புலோலி பல.நோ.கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் இரா.பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது வடமாகாண ஆளுநர் முன்னாள் புலோலி பல.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவரும் உடுப்பிட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளருமான கே.ரி.இராஜசிங்கம், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் தலைமையில் சங்கத்தின் தேவைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக காரியாலயக் கட்டடம் விஸ்தரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டபோது ஆளுநர் 2 மில்லியன் ரூபாவை கடனாக வழங்குவதற்கு ஒப்புக்கொண்டார்.

மேலும் இக்கட்டடத்திற்கான வரைபடம், செலவுக்கூற்று அறிக்கை ஆகியவற்றுடன் சங்கத்தின் தலைவரின் கடிதத்தை ஒருவார காலத்திற்குள் அனுப்பி வைக்குமாறு அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து 30 வருடங்களுக்கு முன்னர் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 4 பரப்புக்காணியையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை திருவுருவச்சிலை இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டதையும் பார்வையிட்டார்.

அத்திருவுருவச்சிலைக்கு முன்னாள் தலைவர் கே.ரி இராஜசிங்கம் மலர்மாலை அணிவித்தார். (109)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அம்பனை அருள்மிகு ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.24 மணிமுல் 11.48 மணிவரை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை அடியார்களின் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகளை கீரிமலை ஸ்ரீ மகாமுத்துமாரியம்மன் ஆலய பிரதம குருவும், ஆதின கர்த்தாவுமான சிவஸ்ரீ நகுல நவராஜ உமாபதீஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார்.

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணைநகர் கில்னர் ஒழுங்கை அருள்மிகு மகாமாரி அம்மன் ஆலய மகோற்சவம் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் அரம்பமாகியுள்ளதுடன் தொடர்ந்து திருவிழா நடைபெற்றுவருகிறது.

இவ் உற்வத்தில் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்கமும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

## பணிகள் ஆரம்பம்

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நிதி வீதியில் புதிய மின்கம்பங்கள் நாட்டும் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்காக வீதியோரங்களில் புதிய மின் கம்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பழைய மின் கம்பங்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதனாலேயே இப் புதிய மின் கம்பங்கள் பொருத்தும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (85)

# வர்த்தகப் பிரிவு மீண்டும் ஆரம்பம்

நயினாதீவு மகா வித்தியாலயத்தில் மீண்டும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பிரிவு இடம்பெற்று வந்த நிலையில் பின்னர் நிறுத்தப்பட்டது.


எனினும், கடந்த 9 ஆம் திகதி தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன் இப்பிரிவை ஆரம்பித்து வைத்தார். இதேவேளை, 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப்பாடசாலை இணைக்கப்பட்டுள்ளதாக பாடசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (93)

# கட்டடப் பணிகளை அமைச்சர் பார்வை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் சங்கானை தெற்குப் பிர்தேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலாசார மண்டபத்தை கலாசார அமைச்சர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

80 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசார மண்டபத்திற்கான கட்டப்பணிகள் விரைவில் பூர்த்தியாகும் என தெரிவிக்கப்படுகிறது. (55)



இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் மன்றத்திற்கு அறநெறி ஆன்மிக அபிவிருத்தி வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது, விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பிரமுகர் ஒருவர் மங்கள விளக்கேற்றுவதையும், கலந்துகொண்ட இளைஞர்களையும் காணலாம். (105)

சிந்தனை செய்வது, வளர்ச்சியைத் தரும், கவலைப்படுவது அழிவைத் தரும். - என்.வியெஷல்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சாவதும் புதுவது அன்றே!

மரணம் நிழல்விரித்த பாதையில்தான் மானுடகுலம் நடந்து செல்கிறது. பின்னால் துரத்திவரும் மரணத்துடனான ஓட்டப் பந்தயமாகத்தான் இந்த வாழ்க்கை இருக்கிறது. எந்த நேரத்திலும் அது நம் பிடரிமயிர்களில் காற்றுப் போல உரசிக் கடந்து செல்லலாம்; நம்மை அள்ளிச் சென்றுவிடலாம் என்று நமக்குத் தெரிந்திருக்கிறது.

இருந்தாலும் அதைச் சந்திக்க நேரும் ஒவ்வொரு கணத்திலும் நாம் அதிர்ச்சிக்கும் அழுகை வெடிப்பிலும் ஆற்றாமையிலும் விம்மிக் கலங்குவதல்லால் வேறேதும் முடியவில்லை. எந்தக் காரணத்தை நியாயத்தைச் சொன்னாலும் சாவுக்கு நம்மிடம் எந்தத் தேறுதலும் இல்லை.

வாழ்வின் நீதிமன்றில் மன்னிக்க முடியாத குற்றம் போரே. வாழ வேண்டிய உயிர்களை வலிந்து சூறையாடும் கொடூரம் அது. நாம் நாகரிக மனிதர்களாக மாறிப் பல பத்தாயிரம் வருஷங்களுக்கு மேலாகிறது என்கிறார்களே. எவ்வளவோ நாகரிக வளர்ச்சிகளை எல்லாம் கண்டுவந்துவிட்ட நமக்கு இன்னும் போரை நிறுத்தும் வழி காணமுடியவில்லை, ஏன்?

பூவுலகில் அடர்த்தி மிகுந்து வாழ்கிற மனித இனம் இன்று உள்ளீடான ஒரு நஞ்சை அருந்திக் கொண்டிருக்கிறது என்று லெவி–ஸ்ட்ராஸ் சொன்னார். நம்மையே அழித்துக் கொள்ளும் விதமாக மனிதர்கள் நாம் அருந்திக் கொண்டிருக்கும் நஞ்சு எதுவாக இருக்க முடியும்? பகையும் வெறுப்பும்தான். மனிதர் போரையும் வன்முறையையும் உயிரழிவுகளையும் தொடர்ந்து பெருக்கிக் கொண்டிருப்பதை வேறு எப்படிப் புரிந்து கொள்ள?

அப்பாவி மக்களின் வாழ்வு அல்லல்களுக்குள் சிக்குப்பட்டுக் கிழிந்து கொண்டிருப்பதை, அநீதிகளும் அநியாயங்களும் நடந்து கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அவை எதிர்க்கப்பட வேண்டும் என்பதும் உண்மையே. ஆனால், அநியாயங்களை எல்லாம் ஆவேசமாய் எதிர்த்தபடி செல்லுதல் என்ற ஒற்றைவழிப் போக்கில் இன்றைய சிக்கல்களை விடுவித்துவிட முடியாது. அது மேலும் தாங்கொணாத் துயர அழிவுகளைத் தந்து, இறந்தவர்களை நினைத்து உயிரோடிருப்பவர்கள் நைந்து நைந்து புலம்பும்படியான வாழ்வெனவே ஆகிறது.

ரஷ்ய எழுத்தாளர் துர்கனேவ் சொன்னார், “ஒரு பூகம்பம் வந்து ரஷ்யா முழுக்க அழிந்து போனாலும் உலகத்தில் ஒருவரும் கவலைப்படப் போவதில்லை.” இதை நாமும் புரிந்து கொள்ள வேண்டும். நம் கஷ்டத்தைப் பெரிதாக்கிக் கொண்டால் வேறு யாரும் உதவிக்கு வருவார்கள் என்று பெருங்குரலெடுத்துப் புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. உயிர்கள் அழிவதை உண்மையில் யார் யாரெல்லாம் தங்களையுமறியாமலே விரும்பியிருந்தார்கள் என்று கண்டறிய ஒரு கருவி இருந்தால், நம்மெல்லோருக்குமே அது பலவிதமான அதிர்ச்சிகளை ஒருவேளை தரக்கூடும்.

ஜோர்ஜ் லூகாச் 1919–ல் எழுதிய ‘நடைமுறைத் தந்திரமும் அறவியலும்’ என்ற கட்டுரையில் சொன்னார்: “போராட்டத்தின் பக்கம் நிற்க முடிவு செய்திருக்கும் ஒவ்வொருவரும் போராட்டத்தில் மடிகின்ற ஒவ்வொரு மானுடஜீவியின் மரணத்திற்கும் தானே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்–அவர்கள் அனைவரையும் தானே கொன்றுவிட்டதாகக் கருதி. அறவியல் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், யாருமே இந்தப் பொறுப்பிலிருந்து நழுவ முடியாது. அதாவது, தான் ஒரு தனி மனிதன், எனவே உலகத்தின் தலைவிதி தன்னைச் சார்ந்திருப்பதில்லை என்னும் சாக்கைச் சொல்லி இந்தப் பொறுப்பிலிருந்து நழுவ முடியாது.”

இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதைத் தவிர இப்போது நாம் வேறென்ன செய்யக்கூடும்?

- ஆசிரியர்

# உராய்வு எண்ணெய் பெற்றும் கட்டணம் செலுத்தாத மின்சாரசபை

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை இந்த வருடத்திற்காக பெற்றுக் கொண்ட உராய்வு எண்ணெய்க்காக இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மின்சார சபை தாம் பெற்றுக் கொள்ளும் உராய்வு எண்ணெய்க்காக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கட்டணம் செலுத்துவது வழமையாகும் என பெற்றோலிய வளத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதிக்குரிய 28 பில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபை செலுத்தத் தவறியுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் மேலதிக நிதி முகாமையாளர் பீ.கே.குலத்துங்க தெரிவிக்கையில், நிலுவையாக உள்ள கட்டணத்தை தவணை அடிப்படையில் செலுத்தவுள்ளதாக கூறினார்.

ஒவ்வொரு மாதமும் 1.3 பில்லியன் ரூபாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நயினை அம்மனுக்கு போலிநகை தானம் செய்த பெண் கைதானார்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு போலி நகையினை தானமாகக் கொடுத்ததுடன், தகராறிலும் ஈடுபட்ட பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புங்குடுதீவைச்சேர்ந்த பெண் ஒருவரையே ஆலயச் சூழலில் கடமையில் இருந்த பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, புங்குடுதீவைச் சேர்ந்த நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு நேற்று முன்தினம் சென்று வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்.

வழிபாடுகளை முடித்துக்கொண்ட குறித்த பெண் ஆலயத்திற்கு நகைகள் தானம் செய்வதாகக் கூறி தான் கொண்டு வந்த நகைகளை ஆலய நிர்வாகத்தினரிடம் கையளித்துள்ளார். தான் தானமாக கொடுத்த நகைகளின் பெறுமதி 2 இலட்சம் ரூபா எனத் தெரிவித்ததுடன் அந்தப் பெறுமதிக்கான பற்றுச்சீட்டினையும் பெற்றுக் கொண்டார்.

தானமாக கொடுத்த நகைகள் மீதும் அந்தப் பெண்ணின் நடவடிக்கையின் மீதும் சந்தேகம் கொண்ட ஆலய நிர்வாக சபையினர் நகைகளைச் சோதனை செய்த போது, அவை போலியானவை என்பது தெரியவந்தது. இந்தப் போலி நகைகள் தொடர்பில் குறித்த பெண்ணிடம் நிர்வாகத்தினர் விசாரித்த போது ஆலய நிர்வாக சபையினரைத் தகாத வார்த்தைகளினால் அவர் ஏசியுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

# நலன்புரி முகாமில் இந்தியப் பிரஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட இந்தியப் பிரஜை மிரிஹான நலன்புரி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்து யாழ். பருத்தித்துறைப் பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவேளை பருத்தித்துறைப் பொலிஸார் அவரைக் கடந்த புதன்கிழமை கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட இந்தியப் பிரஜையை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவரை மிரிஹான நலன்புரி முகாமிற்கு அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார். (25)

# வெலிக்கடைச் சிறையில் தேடுதல்; 22 கைத்தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது கையடக்கத் தொலைபேசிகளுடன் ஹெரோயின் மற்றும் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. 16 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு விடுதிகளில் இருந்து 22 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் பெண் கைதிகளின் விடுதிகளைச் சோதனையிடுவதற்கு முற்பட்டபோது கைதிகள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் பெண் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதிகளில் தேடுதலை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் விமல்வீரவன்ச ஆங்கில மொழிகற்க வேண்டும்

## கோருகிறது பொதுபலசேனா

(கொழும்பு)

நோர்வே தூதரகத்தின் அறிக்கைகளை வாசிப்பதற்கு முன்னர் அமைச்சர் விமல் வீரவன்ச ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் என்று, பொதுபலசேனா பதிலடி கொடுத்துள்ளது.

பொதுபலசேனாவுக்கு நோர்வே நிதியுதவி வழங்குவதாக விமல் வீரவன்ச கூறிய குற்றச்சாட்டுக்குறித்து பதிலளித்த பொதுபலசேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்துஞானசார தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

நோர்வே தூதரக அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை விமல் வீரவன்சவும் அவரது ஆலோசகர்களும் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

இவர்களின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து நேரத்தை வீணடிக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோயாளி இனங்காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேசத்தின் பொன்னாலை கிராம அலுவலர் பிரிவில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள் குடியேறி வசித்துவரும் நிலையில் இம்மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையுடன் கூடிய மழையினால் டெங்கு தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மக்கள் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது தொடர்பாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (55)

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

கரவெட்டி கால்நடைவைத்திய அதிகாரி பருத்தித்துறை கால்நடை காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கரவெட்டி கால்நடைவைத்திய அதிகாரி பணிமனைக்கு கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (18)

# அரசியல் பிரச்சினைக்கு அதீத முழக்கங்கள் மட்டும் தீர்வாகாது....!

**("செம்மலர்" - மே மாத இதழுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச்செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் அளித்த பேட்டியிலிருந்து...)**



● கேள்வி: தனி ஈழம் தீர்வாகாது என்று 80களில் மார்க்சிஸ்ட் கட்சி கூறியது சரியாக இருக் கலாம். ஆனால் இன்றும் அதையே கூறுவது சரியா? ஒன்றுபட்ட இலங்கைக்குள் நல்லது ஒன்றுமே நடக்காத போது தனி ஈழம்தான் தீர்வு என்று கோருவது எப்படித் தவறாகும்?

ஜி.ஆர்: தனிஈழம் என்னும் கோரிக்கை யின் பின்னால் எல்லோரும் இருப்ப தாகச் சொல்வது சரியல்ல.. அதை விளக்கமாகப் பார்க்க வேண்டும். இலங்கையில் வாழும் தமிழ் மக் களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அடிப்படை யான நோக்கம். தனி நாடு கேட்டால் நல்லதை விடத் தீங்குதான் தமிழர் களுக்கு வந்து சேரும் என்பதுதான் தொடர்ந்து எமது புரிதலாகவும் நிலைப்பாடாகவும் இருக்கிறது. தமிழகத்தில் இருப்பவர்களை விடுங்கள். இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எல்லோருமே தனி ஈழம் கேட்கவில்லை என்பதை இந்த நேரத்திலாவது - இவ்வளவு அழிவுக்குப் பிறகாவது - நிதானத் துடன் நாம் பார்க்க வேண்டும். நடை முறையில் சாத்தியமில்லாத முழக்கம் அது. இலங்கை அரசின் மீது ஒரு அரசியல் நெருக்கடியும் அழுத்தமும் உருவாக்குவதற்கான உத்தியாகவே (PRESSURE TACTICS) தனி நாடு கோரிக்கையை ஆரம்பத்தில் முன்வைத்தார்கள். அதன் மூலம் தமிழ் மக்களுக்கான சம உரிமை யுடன் கூடிய அரசியல் தீர்வைப் பெற முடியும் என்றுதான் அவர்கள் நம்பினார்கள்.

தமிழ் மக்கள் மூன்று பிரிவாக இலங்கையில் இருக்கிறார்கள். யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்குப் பகுதியிலும் கிழக்கு மாகாணத் திலும் வாழும் பூர்வீகத்தமிழர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் ஒரு பிரிவு. மலையகத்தமிழர் என்றழைக்கப்படும் தோட்டத் தொழி லாளிகளான இரண்டாவது பிரிவினர். தமிழ் முஸ்லிம்கள் மூன்றாம் பிரி வினர். மலையகத் தமிழர்களும் தமிழ் முஸ்லிம்களும் தனி ஈழம் கேட்கவில்லை. தென்னிலங்கையில் கொழும்பிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் 2இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களும் தனி நாடு கேட்கவில்லை. கொழும்பின் முன்னணி வியாபார வர்க்கத்தின் பகுதியாக தமிழர்கள் கணிசமாக அங்கே வாழ்கிறார்கள்.



"இன்னும் தமிழகத்தில் இனவாத உணர்வைத் தூண்டிக்கொண்டிருப்பது இலங்கையில் சிக்கலில் இருக்கும் தமிழ் மக்களுக்கு மேலும் தீங்கு விளைவிக்கும் என்பதை உணர வேண்டும். தமிழ் நாட்டுக் கட்சிகளும் அமைப்புகளும் தம் அரசியலுக்காக அல்லாமல் உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களுக்கு இப்போது என்ன தேவையோ அதற்கான முழக்கங்களை முன்வைத்து இந்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். அதீதமான கோரிக்கைகளைக் கைவிட்டு யதார்த்த நிலைமைக்கேற்ப குறைந்தபட்ச செயற்திட்டத்தோடு பேச வேண்டும்.

1947இல் பாகிஸ்தான் தனி நாடாக பிரிந்தபோது நிகழ்ந்ததைப்போல இலட்சக்கணக்கான மக்களின் இடப் பெயர்வையும், துயரத்தையும் தனி நாடு கோரிக்கை தமிழர்களுக்குக் கொண்டுவரும். தமிழ் முஸ்லிம்கள் நீண்ட நெடுங்காலமாக சிங்களவர் பெரும்பான்மையாக உள்ள கட்சிகள், அமைப்புகளோடுதான் நெருக்கமாக இருந்து வருகின்றனர். புலிகளோடு நீண்டகாலப் பகைச் சூழல்தான் அவர் களுக்கு இருந்துள்ளது. சமீபத்தில் சென்னையில் எங்களைச் சந்தித்த இலங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் ஒருவர் கூறியதை இங்கே எடுத்துரைக்க வேண்டும்.

நடந்து முடிந்த கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழர்களுக்கு பெரும் பான்மை கிட்டவில்லை. தமிழ் முஸ்லிம்களிடம் நாம் கூட்டணி அமைக்கலாம். முதல்வர் பதவியை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு திட்டத்தை முன்வைத்தோம். ஆனால் அவர்கள் அதை ஏற்க வில்லை. சிங்களவர்களுடன்தான் கூட்டு வைத்து அமைச்சரவை அமைத்துள்ளனர் என்று கூறினார். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியிலிருந்து 48 மணி நேரத்தில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் வெளியேற வேண்டும் என புலிகள் உத்தரவிட்டு விரட்டியடித்த கொடுமை முஸ்லிம் மக்கள் மனங்களில் ஆறாவடுவாக இன்றும் உள்ளது.

இலங்கையின் ஆளும் அரசு தமிழர் களுக்கு தீமையைத் தவிர வேறு ஏதும் செய்யவில்லையே என்கிற வெறுப்பிலிருந்து அந்தக் கடைசிக்குச் சென்று தனி ஈழம்தான் தீர்வு என்று கோருவது நடைமுறையில் அவர் களுக்கு நன்மை பயக்காது. கால தாம தம் ஏற்பட்டாலும் சர்வதேச மற்றும் இந்திய அளவில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியும் இலங்கையின் உள் நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளின் முன்னெடுப்பிலும் ஓர் நிரந்தர அரசி யல் தீர்வைக் காண வேண்டும். இன்றைய உடனடித் தேவைகளுக்கான முழக்கங்களை எழுப்புவதே சரியாக இருக்கும். தமிழர் வாழும் பகுதி யிலிருந்து இராணுவத்தை விலக்குதல், தமிழ்ப்பகுதிகளைச் சிங்களமயமாக்கும் முயற்சிகளை நிறுத்துதல், போரினால் சொல்லொணாத் துயருக்கு ஆளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு சமாதானமும் அவர்களின் மனக் காயங்களுக்கு ஆறுதலும் தரும் வித மான அணுகுமுறையும் மீள் குடிய மர்வுக்குத் தேவையான சகல ஏற்பாடு களும் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

புலிகள் என்கிற சந்தேகத்தின் பேரில் பிடித்துச்செல்லப்பட்ட அல்லது காணாமல் போன பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் வீடு திரும்ப வேண்டும். ஓர் அர்த்த முள்ள பேச்சுவார்த்தையைத் தொடக்கி தமிழர்களுக்கு சம அந்தஸ்தும் சம உரிமையும் கூடிய மாநில சுயாட்சி யுடன் காவல்துறை மற்றும் இதர நிர்வாக உரிமைகளுடன் கூடிய தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும். இது போல அம்மக்கள் என்ன தேவை யில் இப்போது இருக்கிறார்களோ அதற்கான முழக்கங்களை எழுப்ப வேண்டும். அதுதான் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

சின்னச்சின்ன இரண்டு நாடுக- ளாக (ஏற்கனவே அது சின்ன நாடுதான்) இலங்கை பிரிவது என்பது ஏகாதிபத்தியம் நுழைவதற்கான பாதையை அகலத்திறப்பதாகும். அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மட்டுமல்ல. இந்தப் பிராந்தியத்துக்கே ஆபத்து.

● கேள்வி: நடந்து முடிந்துள்ளது இனப் படுகொலை என்று அறிவிக்க வேண்டும் என தி.மு.க,அ.தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகள் கேட்கின்றன. மார்க்சிஸ்ட் கட்சி அப்படிக் கோரவில்லை அல்லவா?

ஜி.ஆர் : முள்ளிவாய்க்காலில் நடந்தது எல்லோருடைய மனங்களையும் உறைய வைத்துள்ள கொடுமை. ஆனால் சர்வதேச அளவில் என்ன புரிதல் இருக்கிறதெனில் ஆயுதமற்ற மக்களின் மீது ஆயுதத் தாக்குதல் தொடுத்து அழிப்பதுதான் இனப்படு கொலை என்கிறார்கள். இங்கே ஆயுதபாணிகளான இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடந்த போரில் அப்பாவித் தமிழர்கள் இரு தரப்பாலும் கொல் லப்பட்டுள்ளனர் என்றே ஐ.நா. பொதுச் செயலாளர் நியமித்த மூவர் குழு குறிப்பிடுகிறது. ஆகவே மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் கடுமையான அளவுக்கு நடந்துள்ள போர் என்று கணிக்கிறார்கள். இனப் படுகொலை என்று குறிக்கவில்லை. இலங்கையின் பிற பகுதிகளில் வாழும் தமிழர்கள் தாக்கப்பட வில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். உரிய, நம்பகமான விசாரணையும் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் தேவை என்றுதான் மார்க்சிஸ்ட் கட்சி கோருகிறது.

● கேள்வி : இலங்கைத்தமிழர் பிரச்சினைக்காக மார்க்சிஸ்ட் கட்சி ஒன்றுமே செய்யவில்லை என்று ஒரு சாரார் கூறுகிறார்கள்..

ஜி.ஆர்: புலிகளையும் தனி ஈழத்தை யும் நாங்கள் ஒருபோதும் ஆதரிக் காததால் (பல கட்சிகள் அவ்வப்போது பல்டிகள்

அடித்ததுபோல அடிக்காமல்) தமிழக மீடியாக்களும் எங்கள் போராட்டங் களை வெளியிடவில்லை. தமிழக மீடி யாக்களில் கணிசமான பகுதியினர் தனிஈழஆதரவு நிலைப்பாட்டை எடுத்த தும் புலிகளைஅளவுக்கு மீறி விமர்சன மின்றி முன்னிறுத்தியதும் நடந்தது. தமிழக எல்லைக்குள்மட்டும் இயங்கும் அரசியல் கட்சிகளும் மீடியாக்களும் அவரவர் நலன் சார்ந்து இலங்கைப் பிரச்சினையைப் பயன் படுத்திக்கொள் வது தொடர்ந்து நடக்கிறது. அங்கு வாடும் தமிழ் மக்களின் நலன்களை விட இவர்களின் சொந்த அரசியல்.. வர்த்தக நலன்கள் பிரதானமாக இருக் கின்றன. இதுமிகப்பெரிய சோகம்தான்.

இப்போதும் இலங்கைத் தமிழர் பிரச் சினைக்கு யுத்தம் தீர்வாகாது என்ப தும் தனி ஈழம் தீர்வாகாது என்பதும் தான் எங்கள் நிலைப்பாடு. 1987 ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம் ஒரு நல்ல ஒப்பந்தம்தான். அதை ஒன்றுமில்லாமல் செய்ய இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் கூட்டாக செயற்பட்டார்கள். இந்திய அமைதி காக்கும் படையை இலங்கை மண்ணை விட்டு வெளியேற்ற புலி களும் இலங்கை அரசும் கைகோர்த் தது வரலாறு. தனி ஈழத்துக்குக் குறை வான கோரிக்கையை யார் வைத்தா லும் அவர் சிங்களவரோ தமிழரோ அவர்கள் கொல்லப்பட்டார்கள். கதிர் காமர், அமிர்தலிங்கம், நீலன் திருச் செல்வம் எனக் கொல்லப்பட்ட தமிழர் தலைவர்கள் எத்தனை பேர்? அங்கே தனி ஈழம் தீர்வல்ல என்றால் கொல் லப்பட்டார்கள். இங்கே தனி ஈழம் தீர்வல்ல என்று சொன்னால் இனத் துரோகி என முத்திரை குத்துவார்கள். இரண்டும் ஒரே அரசியலின் இரு வடிவங்கள் தாம். வரலாற்றை சுய- பரிசீலனை செய்ய இப்போதாவது நாம் முன்வர வேண்டாமா? சமாதான முயற்சிகள் எல்லாவற்றையும் சீர்குலைத்ததில் புலிகளுக்குப் பங் கில்லையா? புலிகள் போரில் கொல் லப்பட்டுவிட்டதால் அவர்களின் பாதை விமர்சனத்துக்குள்ளாக்கப்படாமல்விடப் பட வேண்டுமா? அது எதிர்காலத் துக்குப் பயன்படுமா? எங்கள் உறுதி யான ஊசலாட்டமில்லாத நிலைப்பாடு காரணமாக - அது சிலருக்கு உவப் பாக இல்லை என்பதால் - எங்கள் போராட்டங்கள் பேசப்படவில்லை என்பது தான் உண்மை.

(17ஆம் பக்கம் பார்க்க)

# பலம் வாய்ந்த அரசாங்கத்தை ஆர்ப்பாட்டம் மூலம் வீழ்த்த முடியாது

## – எதிர்க்கட்சிக்கு கூறுகிறார் நிமல்

(கொழும்பு)

ஆர்ப்பாட்டங்கள் மூலமோ, அழுத்தங்கள் மூலமோ அரசாங்கத்தை வீழ்த்த முடியாது. அரசாங்கம் மிகுந்த பலம் வாய்ந்ததாக உள்ளதென நாடாளுமன்றச் சபை முதல்வரும் அமைச்சருமான சிறிபால டி சில்வா தெரிவித்தார்.


பெரிதாக எதையோ சாதிக்கப் போவதாக எண்ணி கடந்த 15 ஆம் திகதி எதிர்க்கட்சிகள் நடாத்திய ஆர்ப்பாட்டம் தோல்வியில் முடிந்தது போலவே எதிர்வரும் 21 ஆம் திகதிய எதிர்ப்பு நடவடிக்கைகளும் புஷ்வாணமாவது உறுதியெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மின் கட்டண உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்வதற்கு எதிர்க் கட்சிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், அடுத்தடுத்த தோல்வியைச் சந்தித்துள்ள எதிர்க் கட்சியினர் எதையாவது செய்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயற்சிக்கின்றனர். இது அவர்களது பகற் கனவாகும். அவர்களது எந்த ஆர்ப்பாட்டமும் அழுத்தங்களும் அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ, பலவீனப்படுத்தவோ முடியாது. ஏனெனில் மக்கள் பலத்தில் கட்டியெழுப்பியுள்ள அரசாங்கம் மிகுந்த பலமுள்ளதாக உள்ளதென்பதை அவர்கள் உணர வேண்டும்.

பல்வேறு காரணங்களைக் காட்டி மக்களை திசைதிருப்பலாம் என்ற எண்ணத்தில் எதிர்க் கட்சிகள் 15 ஆம் திகதி கொழும்பில் நடாத்திய ஆர்ப்பாட்டம் தோல்வியில் முடிந்தது அதைப் போன்றே 21 ஆம் திகதி அவர்கள் எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொண்டாலும் அது தோல்வியிலேயே முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத இறக்குமதி; கைப்பற்றப்பட்ட வாகனங்கள்



(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான நான்கு வாகனங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த வாகனங்களில் வான் ஒன்றும் கார் ஒன்றும் அடங்குகின்றன. சைக்கிள் இறக்குமதி செய்யும் போர்வையில் இந்த வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

அவற்றை சோதனையிட்ட சந்தர்ப்பத்தில் நான்கு வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்ததாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டனர். அத்துடன் அதி குளிரூட்டப்பட்ட இரண்டு சொகுசு வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பிரிவு குறிப்பிடுகிறது.

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து இந்த வாகனங்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

# உயர்தர மாணவர்களுக்கு நான்காவது வாய்ப்பு

2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு, நான்காவது வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அவர்கள் நான்காவது தடவையும் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்து, பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாக முடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் இதற்கு விண்ணப்பிக்க முடியும். வழமையாக மூன்றாவது முறையுடன் விண்ணப்பதாரிகளின் பல்கலைக்கழக அனுமதிக்கான அவகாசம் நிறைவடையும்.

எனினும் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இந்த விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இடம்பெற்ற பெறுபேறுகள் தொடர்பான குழப்பநிலையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதன்படி விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து, பரீட்சைகள் திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக பிரிவிடம் கையளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

# தன்மீதான தற்கொலைத் தாக்குதல்; பெரிய சதி என்கிறார் பொன்சேகா

(கொழும்பு)

இராணுவத் தலைமையகத்தில் வைத்து தன்மீது நடாத்தப்பட்ட படுகொலை முயற்சி ஒரு பெரியளவிலான சதி என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா மீது நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.55 மணி தொடக்கம் சுமார் நான்கு மணிநேரம் விசாரணை நடாத்தியுள்ளனர்.

சரத் பொன்சேகாவின் பணியகத்துக்குச் சென்ற இரண்டு புலனாய்வு அதிகாரிகளே இந்த விசாரணைகளை நடாத்தியுள்ளனர். சாதாரணமாக சில இளநிலையினர் அல்லது கையாள்பவர்களின் வேலையாக இது இருக்காது என்றே நினைக்கிறேன். இது அதைவிடப் பெரிய சதி என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

சரத் பொன்சேகா மீது நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ள போதிலும், தனக்கு ஆபத்தை விளைவிக்க விரும்பிய பல்வேறு தரப்புகளும் கூட இதனைச் செய்திருக்கலாம் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதல் நடந்து ஏழு ஆண்டுகள் கழித்து இது தொடர்பாக தன்னிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



2005 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களை வாக்களிக்கவிடாமல் தடுக்க விரும்பிய சக்திகளுக்கும் கூட தனது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த முயன்றிருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

2006 ஏப்ரல் 25 ஆம் திகதி கொழும்பில் இராணுவத் தலைமையகத்துக்குள், கர்ப்பிணிப் பெண் போன்று நுழைந்த பெண் சரத் பொன்சேகாவின் வாகனம் மீது தாக்குதல் நடாத்தியிருந்தார்.

இதில் படுகாயமடைந்த சரத் பொன்சேகா, பல மாதங்கள் சிங்கப்பூரில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்குப் பின்னரே உயிர் தப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 58 இலங்கைப் புகலிடதாரிகளை திருப்பி அனுப்பியது அவுஸ்ரேலியா

58 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை அவுஸ்ரேலிய அரசாங்கம் நாடு கடத்தியுள்ளது.

அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து குறித்த புகலிடக் கோரிக்கையாளாகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் இவ்வாறு இரண்டு தொகுதி இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். கடந்த 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இதுவரையில் 1131 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதுடன், இதில் 920 பேர் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டுள்ளனர.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிப்போருக்கு எவ்வித சலுகைகளும் கிடைக்காது என்பதே இவ்வாறான நாடு கடத்தல் உத்தரவுகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் செய்தியாகும் என அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் பிரன்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் படகு–மூலம் அவுஸ்ரேலியாவிற்குச் செல்ல முற்பட்ட 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலாபம் முன்னேஸ்வரம் பகுதியில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னேஸ்வரம் ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்.குருநகர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் சிலாபம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். மேலும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இறுதிக்கட்டப் போரில் எறிகணை வீசியது யார்?

## – தெரியாது என்கிறார் நாமல் –

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது யார் எறிகணைத் தாக்குதலை நடாத்தினார்கள் என்பது தெரியாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்கள் நிலைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டமை குறித்து சர்வதேச ஊடகமொன்று கேள்வி எழுப்பியிருந்தது.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்த போது நாமல் ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கப்படையினரா அல்லது விடுதலைப் புலிகளா குண்டுத்தாக்குதல் நடாத்தினார்கள் என்பது சரியாகத் தெரியாது என அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தெற்கில பாரியளவில் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். பாடசாலைகள், வங்கிகள் உள்ளிட்ட பல்வேறு நிலைகள் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்கள் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் யுத்தம் காரணமாக துயரங்களை அனுபவித்ததாகத் தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டதனை இந்த நாட்டில் எவரும் அனுமதிக்கவில்லை எனவும், சம்பவம் தொடர்பில் காவற்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடத்தல்கள் மற்றும் காணாமற்போதல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# இலகுரக வாகனங்களுக்கு புதிய இலக்கத்தகடு அறிமுகம்

(கொழும்பு)

இலகுரக வாகனங்களுக்கான புதிய ஆங்கில எழுத்து முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகனங்கள் தொடர்பில் இடம்பெறும் மோசடிகளைக் குறைக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம், மூன்று ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட இலக்கங்கள் விநியோகிக்கப்படுவதுடன் முதற்கட்டமாக முச்சக்கர வண்டிகளுக்கும், மோட்டார் சைக்கிள்களுக்கும் இந்த முறைமையின் கீழ் இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மூன்று ஆங்கில எழுத்துக்கள் அடங்கிய வகுப்பின் கீழ், சுமார் 64 இலட்சம் வாகனங்களுக்கு இலக்கத் தகடுகளை விநியோகிக்க முடியும் என்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கு அடுத்ததாக இலகுரக வாகனங்களுக்காக மற்றுமொரு வகுப்பின் கீழ் புதிய இலக்கத்தகடு முறைமை வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த வகுப்பின் கீழும் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு இலக்கங்களை விநியோகிக்க முடியும என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய மூன்று ஆங்கில எழுத்துக்கள் அடங்கிய இலக்கத்தகடு முறையினால் வாகனங்களை அறிந்துகொள்ள முடிவதுடன் மோசடிகளையும் தவிர்ப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

சுமார் 38 இலட்சம் மோட்டார் வாகனங்கள் நாளாந்தம் வீதிப் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் பயனாளிகள் 50பேருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு அமைவாக வடமாகாண ஆளுநரால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் உரியவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பெரிய மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த மாதம் இடம்பெற்ற யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம்களின் வீட்டுத்திட்ட விண்ணப்பங்களைக் கையளிக்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்ட போது தமக்கு துவிச்சக்கரவண்டிகளை பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்ததற்கு அமைவாக வடமாகாண ஆளுநர் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட 50 துவிச்சக்கரவண்டிகள் நேற்றுமுன்தினம் பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இவற்றை விட மேலதிகமாக 50 துவிச்சக்கரவண்டிகளும் ஆயிரம் கூரைத்தகடுகளும் விரைவில் அம்மக்களின் கோரிக்கைக்கு அமைவாக வழங்கப்படவுள்ளன.

யாழ்மாநகர சபை உறுப்பினர் சர புல் அனான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவ, மாணவியர் உள்ளிட்ட பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

தமது கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு தேவைகளை நிறைவேற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோருக்கு மக்கள் தமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

இதில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேவாபுரத்திற்கு விரைவில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை தேவாபுரம் 3ஆம் குறுக்கு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வகையில் மின்கம்பங்கள் நடப்படவுள்ளன.

உடனடி நடவடிக்கையாக இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவிருப்பதாக யாழ்.மாநகர சபை முன்னாள் உதவி மேயர் றீகன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை ஜே/61 நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதிப்பகுதிக்கும், யாழ். தாராக்குளம் வீடமைப்புத்திட்டப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தாவின் பணிப்பின் கீழ் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், யாழ்.மாநகர சபை முன்னாள் உதவி மேயர் றீகன் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக இந்நடவடிக்கை முன்னெடுக்கபடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# நாய்க்கடிக்கு இலக்கான பெண் வைத்தியசாலையில்

(கறுக்காய்)

வரணிப் பிரதேசத்தில் வீட்டில் மின்சார வசதியில்லாததால் தனது கைத்தொலைபேசிக்கு மின் ஏற்றச் சென்றவர் நாய்க்கடிக்கு உள்ளானார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5மணியளவில் நடைபெற்றது. சம்பவத்தில் நாய்க்கடிக்கு உள்ளானவர் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி.கஜீபன் (வயது 30) என்பவராவார். இப்பகுதியில் நாய்களின் தொல்லை தெருக்களிலும், வீடுகளிலும் கட்டுப்பாடு ஏதும் இன்றி கூட்டம் கூட்டமாக அலைந்து திரிவதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இப்பிரிவில் நாய்க்கடிக்கு பலர் உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்தனர். தினமுரசு பத்திரிகையில் பலதடவை தெரியப்படுத்தியும் இப்பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் குறித்து உரியவர்கள் நடவடிக்கை ஏதும் இதுவரை எடுக்கவில்லை என பொதுமக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். (150)

# கடத்தப்பட்ட மாணவன் விடுவிப்பு

(வலிகாமம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 9இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவன், வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரி யவருவதாவது, குறித்த மாணவன் சம்பவதினம் காலை சித்தங் கேணிச் சந்திக்கும், சங்கானைக்கும் இடையில் துவிச்சக்கரவண் டியில் வந்து கொண்டிருந்ததாகவும், வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் மாணவனையும், துவிச்சக்கரவண்டியையும், வானில் ஏற்றிச் சென்று, துவிச்சக்கரவண்டியை சுழிபுரம் விக்டோ ரியாக் கல்லூரிக்கண்மையில் இறக்கிவிட்டு மாணவனை மட்டும் கொண்டு சென்றதாகவும், பின் மாலை மாணவனும் வீடு வந்து சேர்ந்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் கடத்தப்பட்ட மாணவனின் தந்தையார் வெளிநாட்டில் வசித்து வருவதாகவும், மாணவனின் தாயார் ஒரு பாடசாலை ஆசிரியை எனவும் தெரியவந்துள்ளது. (06)

# மகோற்சவம்

சந்திரவெளி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இதில் யூன் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், 8ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன், மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (85)

# யாழ். வரவேற்பு வளைவு நாளை திறந்துவைப்பு

(திருநெல்வேலி)

செம்மணியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இதனை வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார். நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற நல்லூர் பிரதேசசபையின் விசேட கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தவிசாளர் ப. வசந்தகுமார் கூட்டத்திற்குத் தலைமை தங்கினார். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சித் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் அழைக்கப்பட்டுள்ளனர். (137)

# புதிய நிர்வாகத்தெரிவு

(குருநகர்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றிய அங்குரார்ப்பண வைபவமும், புதியநிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவர் கி.இரத்தினராசா, உபதலைவர் சி.இரத்தினகுமார், செயலாளர் ஞா.சுரேந்தர், உப செயலாளர் ந.பிரபாகரன், பொருளாளர் கி.ஜெயகன், கணக்காய்வாளர் வி.அலோசியஸ் ஆகியோருடன் 14 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (68)

# முரசின் இன்றைய பலன்

**(18.05.2013 - சனிக்கிழமை)**

**விஜய வருஷம் வைகாசி மாதம் 04 ஆம் திகதி.**
**நட்சத்திரம், மகம் பின்னிரவு 01.29 வரை. திதி. அட்டமி**
**மாலை 06.42 வரை. இராகுகாலம் 08.53 -10.23 வரை.**
**சுபநேரம் 02.53 - 04.23 வரை. அமிர்தசித்தம்.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | பேச்சில் சாமர்த்தியம் மிகுந்திருக்கும். அத்தியாவசிய வேலைகள் சிறப்பாக முடியும், தொழில், இடையூறு விலகும். சராசரி பணவரவுடன், கடனும் மீளும். சிக்கலாகியிருந்த விவகாரத்தில் தீர்வு வரும். அரச உதவி கிடைக்கும். |
| **ரிஷபம்** | நீதி, நேர்மையில் கறாராயிருப்பீர்கள். நண்பர்களுக்கு உதவுவீர்கள். சமூக நன்மதிப்பு உயரும். தொழில், வளர்ச்சிக்கு கடின உழைப்பு. பணவரவும், நன்மையும் கூடும். வெகுநாள் நினைத்தது வாங்குவீர்கள். பிள்ளைகளால் பெருமை. |
| **மிதுனம்** | மறதியால் சில குழப்பங்கள். நண்பரையும் தவறாக கருதும் சூழ்நிலை ஏற்படும். தொழில், உள்ள அனுகூலத்தன்மையை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு. செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல். |
| **கடகம்** | நண்பருடன் பலகதை பகிர்வீர்கள். மனதில் இருந்த சஞ்சலம் விலகும். தொழில், அனுகூல காரணி பலம் பெறும். பணவரவு திருப்திகரமாகும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். கலைஞர், மாணவர்க்கு நன்னாளாக அமையும். |
| **சிம்மம்** | சிலர் உதவி கேட்டு வருவர். நியாய, தர்மம் பின்பற்றி, உதவுவீர்கள். தொழில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். சேமிப்பு செலவுக்கு ஆகும். உடல்நலத்திற்கு உணவில் கவனம். மாலையில் இசை இரசித்து மன அமைதி. |
| **கன்னி** | சிரமம் தேடி வரும். நிதான அணுகுமுறையால் விலக்கலாம். தொழில், தாமதகதியில் இயங்கும். புதிய செலவு வரும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். உடல்நலம் பாதுகாக்க ஓய்வு தேவை. இறையருளை எண்ணி சாந்தம். |
| **துலாம்** | நடப்பவை பார்த்து, மனதில் சஞ்சலம் உருவாகும். நல்லோரின் ஆலோசனை புதிய வழிகாட்டும். தொழில், சில மாற்றம் செய்வீர்கள். அளவான பணவரவு. பகட்டுக்காக பயன் தராப் பொருள் வாங்காதீர். குடும்பத்தினருக்காக அலைச்சல். |
| **விருச்சிகம்** | உறவினருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு. பிள்ளைகளின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை. |
| **தனுசு** | சிலர் கோபமூட்டலாம். குடும்ப பெரியவர்களின், கருத்துக் கேட்டு நடப்பது நல்லது. தொழில், புதிய அணு குமுறை பின்பற்றுவீர்கள். பணவரவு சுமார். போட்டி, பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். வழிபாடு மனம் அமைதி பெற உதவும். |
| **மகரம்** | உங்கள் சமூகப் பணிகளுக்காக புகழ் கிடைக்கும். திட்டமிட்ட வேலை இலகுவில் முடியும். தொழில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்வு. உத்தியோகத்தர்களுக்கு, சலுகையும் அனுகூலமும். |
| **கும்பம்** | குடும்பத்தினர், அதிக எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். உற்சாகமாய் திருப்திப்படுத்துவீர்கள். தொழில், சாதனை இலக்கை எட்டும். முக்கிய தேவைக்கு சேமிப்பிலிருந்து எடுப்பீர்கள். வாகன பயணத்தில் கவனம். வெற்றிச் செய்தி வரும். |
| **மீனம்** | மனதில் அன்பும், கருணையும். சார்ந்தவர்களுக்கு தேவையான உதவி செய்வீர்கள். தொழில், செழிக்கும். உபரி பணவரவு. உண்டு மகிழ்வீர்கள். வெளியூரிலிருந்து மனதை மகிழ்விக்கும் செய்தி. குடும்பத்தில் மங்கல நிகழ்வு. |

# வேண்டும் ஆயுள் தண்டனை

சூதாட்ட சர்ச்சையில் சிக்கி கைதாகியுள்ள வீரர்கள் மீதான குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு ஆயுள் தடை விதிக்க வேண்டும் என்று முன்னாள் கப்டன் கங்குலி, இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் சீனிவாசன் உள்ளிட்டோர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தால் மிகுந்த ஏமாற்றமும், கோபமும் ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வீரர்கள் குற்றம் செய்தது உறுதியானால், கிரிக்கெட் விளையாட அவர்களுக்கு ஆயுள் தடை விதிக்க வேண்டும். இது போன்ற ஊழலுக்கு வீரர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். அவர்களை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. ஸ்ரீசாந்த்தின் நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்துள்ளேன். அவரது திறமை முழுவதும் இதனால் வீணாகிவிட்டது. றோயல்ஸ் அணிக் கப்டன் ராகுல் ராவிட்டுக்காக வருந்துகிறேன். அவர் தலைமையிலான அணி வீரர்கள் இப்படி நடந்துகொண்டதை ஏற்கவே முடியாது எனவும் கங்குலி தெரிவித்தார்.

இடி விழுந்தது போலுள்ளது மற்றவர்கள் பற்றித் தெரியாது. ஆனால், இடி விழுந்தது போல எனக்கு மிகவும் அதிர்ச்சியாக உள்ளது. கிரிக்கெட் சபையும் அதிர்ச்சி அடைந்துள்ளது. நாங்கள் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

இதில் சம்பந்தப்பட்ட 2 பேர் ரஞ்சி போட்டியில் விளையாடும் வீரர்கள். இன்னொருவர் டெஸ்ட் வீரர். இதுதான் மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. தவறிழைத்த வீரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். கிரிக்கெட் விளையாட்டை தூய்மையாகவும் நேர்மையாகவும் நடத்தி வருகிறோம்.

சில வீரர்களின் மோசமான செயற்பாட்டை வைத்து ஒட்டு மொத்தமாக கிரிக்கெட் விளையாட்டை கேவலப்படுத்துவது சரியல்ல. வீரர்களிடம் சூதாட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம் என கிரிக்கெட் சபைத் தலைவர் சீனிவாசன் தெரிவித்தார்.

# ஐ.பி.எல். சூதாட்ட முறைகேடு
## விளக்கமளிக்கும் டில்லி காவல் ஆணையர்



ஐ.பி.எல். போட்டிகளில் சூதாட்ட முறைகேடு நடந்ததாக ஸ்ரீசாந்த் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இது குறித்து டில்லி காவல் ஆணையர் நீரஜ் குமார் செய்தியாளர்களிடம் விளக்கமளித்தார்.

அதில் அவர் தெரிவித்ததாவது, வீரர்களுக்கும், சூதாட்டத் தரகர்களுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை வைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஓவரில் இவ்வளவு ஓட்டங்கள் விட்டுக் கொடுப்பேன் என்று குறிப்பிட்ட வீரர் ஒரு செய்கை மூலம் தரகருக்கு உணர்த்த வேண்டும். அப்போது தரகர்கள் தங்கள் சூதாட்டத்தைத் தொடங்குவார்கள். இவ்வாறு, ராஜஸ்தான் றோயல்ஸ் வீரர் சாண்டிலா தரகர்களின் பேரத்தின் படி, முன்கூட்டியே ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். ஆனால், அவ்வாறு ஓட்டங்களைக் கொடுக்கும் முன்னதாக, அதற்குரிய சமிக்ஞைகளை தரகர்களுக்கு அவர் வெளிப்படுத்தவில்லை. இதனால், அவருக்கு முன்னதாகத் தரப்பட்ட ரூ.20 இலட்சம் பேரத் தொகையை தரகர்கள் திரும்பிக் கேட்டுள்ளனர். புனே வாரியர்ஸ் அணிக்கு எதிராக மே 5ஆம் திகதி நடந்த போட்டியில் இது நடந்துள்ளது. சாண்டிலா வானத்தைப் பார்க்க வேண்டும். ஆனால், அவர் பார்க்கவில்லை அதே நேரம், சாண்டிலா அந்த ஓவரில் வீசிய 6 பந்தில் உத்தப்பாவும் பின்ச்சும் 14 ஓட்டங்களை எடுத்தனர். இதுவும் தீர்மானிக்கப்பட்டதுதான்! ஆனால் தரகர்கள் சூதாட்டம் நடத்த வசதியாக இவர் அடையாளங்கள் எதையும் அவர்களுக்குக் காட்டவில்லை. இதனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பணம் திருப்பிக் கேட்கப்பட்டதாம்.

மே 9ஆம் திகதி மொகாலியில் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் போட்டியில், ஸ்ரீசாந்த் தனது 2ஆவது ஓவரை வீசுவதற்கு முன் தனது பேண்டில் வெள்ளை கைக்குட்டை ஒன்றைப் போட்டுக் கொள்ளவேண்டும், இதுதான் அடையாளம். அதாவது, அந்த ஓவர் சூதாட்ட ஓவர் என்பது பொருள். அதேபோல் ஸ்ரீசாந்த் கைக்குட்டை பெற்றுக் கொள்கிறார். சிறிது நேரம் பயிற்சி செய்த பிறகு 13 ஓட்டங்களை வாரிக் கொடுத்தார். அந்த ஓவரை வீசத் தொடங்குவதற்கு முன் துடுப்பாட நேரம் வேண்டும் எனவே ஏதாவது செய். ஆனால் என்ன செய்யப் போகிறாய் என்பதை தெரிவித்துவிடு என்று தரகர் மூலம் ஸ்ரீசாந்துக்கு தகவல் வருகிறது. அந்த ஓவரில் மார்கூஷ் மற்றும் கில்கிறிஸ்ட் பந்துகளை விளாசித் தள்ளினர். அந்த ஓவருக்குப் பின்னர், ஸ்ரீசாந்த் பந்து வீச வரவில்லை. கடைசிப் போட்டியாக இரவு நடந்த மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி. இதில், சண்டிலா, சவான் இருவரின் செயற்பாடும் சூதாட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இந்தப் போட்டியில் சாண்டிலா களத்தில் இறங்கி ஆடவில்லை என்றாலும், சாண்டிலாதான் சூதாட்டத் தரகர்களுக்கும், சவானுக்கும் இடையே இடைத் தரகு வேலை செய்துள்ளார். இவரிடம் 60 இலட்சம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஓவரில் சவான் 13 ஓட்டங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, அவர் ஏற்கெனவே வீசிய முதல் ஓவரில் கட்டுக்கோப்பாக வீசி 2 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்த சவான், இரண்டாவது ஓவரில், முதல் மூன்று பந்துகளிலேயே இரண்டு சிக்ஸர் ஒரு இரண்டு ஓட்டம் என 14 ஓட்டங்களை விட்டுக் கொடுத்துவிட்டு, அடுத்த மூன்று பந்துகளை கட்டுக்கோப்பாக வீசிவிடுகிறார். இது சூதாட்டக்காரர்கள் சொன்ன ஓட்டத்தை விட ஒரு ஓட்டம் கூடுதலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## அங்கீட்சவான் ஒப்புதல்



(புதுடில்லி)

சூதாட்டத்தில் ஈடுபட்டு கைதான ராஜஸ்தான் றோயல் வீரர் அங்கீட்சவான் டில்லி பொலிஸாரிடம் தனது குற்றத்தை கண்ணீர் மல்க ஒப்புக்கொண்டுள்ளார்.

பொலிஸில் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் அங்கீட்சவான் கூறியதாவது:-

சூதாட்டத்தில் ஈடுபட்டது உண்மைதான். நான் மிகப்பெரிய தவறு செய்துவிட்டேன். இவ்வாறு அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

## மனதளவில் பாதிப்பு ராவிட் புலம்பல்

சூதாட்டத்தில் எங்கள் அணி வீரர்கள் 3 பேர் ஈடுபட்டு கைதானது எனக்கு மிகுந்த அதிர்ச்சியாக இருக்கிறது. இதனால் ஏமாற்றமும் அடைந்தேன். இந்தச் சம்பவத்தால் ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் மற்ற வீரர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எந்த நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். எனது வாழ்நாளில் இது மிகவும் கடினமானதாகும். எனது அணி வீரர்களும் இதே நிலையில் தான் உள்ளனர் என ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார்.



## சர்ச்சையும், முடிவும்

(டில்லி)

இந்திய வீரர் ஸ்ரீசாந்த் சர்ச்சைகளில் அடிக்கடி சிக்கிக் கொள்வார். தற்போது சூதாட்டத்தில் ஈடுபட, இவரது கிரிக்கெட் வாழ்க்கை அனேகமாக முடிவுக்கு வந்துள்ளது. கடந்த 2007இல் நடந்த ருவென்ரி-20 உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானின் மிஸ்பா கொடுத்த பிடியைப் பிடித்த ஸ்ரீசாந்த், இந்திய அணி சம்பியன் பட்டம் வெல்ல கைகொடுத்தார். இதற்கு பின் களத்தில் இவரது செயற்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை.

இவரது சர்ச்சைகளில் சில...


* 2007இல் நொட்டிங்காமில் நடந்த இங்கிலாந்துக்கெதிரான டெஸ்டில், கப்டன் மைக்கல் வோன் தோள்பட்டையை இடித்துச் சென்ற காரணத்தினால், போட்டி சம்பளத்தில் இருந்து 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டார்.

* மொகாலியில், 2008இல் நடந்த பிரிமியர் கிரிக்கெட் லீக் போட்டியின் போது வெற்றி மகிழ்ச்சியில் இருந்த பஞ்சாப் அணியின் ஸ்ரீசாந்தை, மும்பை அணியின் ஹர்பஜன் சிங் கன்னத்தில் அறைந்தார். இது, மிகப் பெரிய சர்ச்சையாக வெடித்தது. இதனால் ஹர்பஜனுக்கு மீதமுள்ள போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டது.

* கடந்த 2009இல் இரானி கோப்பையின் போது மும்பை அணியின் வேகப்பந்துவீச்சாளர் தவால் குல்கர்னியுடன் மோதல் போக்கை கடைபிடித்த ஸ்ரீசாந்துக்கு, பி.சி.சி.ஐ., எச்சரிக்கை விடுத்தது. தவறான வார்த்தைகள் பயன்படுத்திய காரணத்திற்காக போட்டி சம்பளத்தில் இருந்து 60 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

* கடந்த 2010இல் கேரள கிரிக்கெட் அணியின் கப்டனாக நியமிக்கப்படாததை கண்டித்து, விமர்சனம் செய்த ஸ்ரீசாந்த், கேரள கிரிக்கெட் சங்கத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

## நிதான ஆட்டம்



(லோர்ட்ஸ்)

நியூசிலாந்துக்கெதிரான முதல் டெஸ்டில், முதன்நிலை விக்கெட்டுகளை இழந்தஇங்கிலாந்து அணி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம்ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து கப்டன் குக், முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மழை குறுக்கிட, முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஜோ ரூட் (25), ஜானி பேர்ஸ்டோவ் (3) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர். கப்டன் குக் 39, இயன் பெல் 31 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் டிரண்ட் பவுல்ட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## ஓராண்டுத் தடை விதித்தது பிபா

கால்பந்து சூதாட்டத்தில் ஈடுபட்ட எட்டு எஸ்டோனியா வீரர்களுக்கு போட்டியில் பங்கேற்க, ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. எஸ்டோனியா கிண்ணத் தொடர்களில் பங்கேற்கும் எஸ்டோனியா அணி வீரர்களில் 8 பேர் கடந்த 2011ஆம் ஆண்டு நடந்த பல போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதற்கான விசாரணை லண்டன் நகர நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. தற்போது இதில் சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு உலக கால்பந்து கூட்டமைப்பு(பிபா) தண்டனையை அறிவித்துள்ளது. இதன்படி இவர்களுக்கு சர்வதேச போட்டிகளில் பங்கேற்க ஒரு ஆண்டு கால தடைவிதிக்கப்பட்டுள்ளது.

FIFA

## டேவிட் பெக்காம் ஓய்வு



கால்பந்து அரங்கில் 20 ஆண்டுகளாக கொடிகட்டிப் பறந்த இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் ஓய்வை அறிவித்தார். இங்கிலாந்து கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் (வயது-38). கடந்த 1992 இல் 18 வயதுக்குட்பட்டோருக்கான இங்கிலாந்து அணியில் இடம் பிடித்த பெக்காம், 1996 இல் இங்கிலாந்து அணிக்காக சர்வதேச போட்டியில் பங்கேற்றார். இதுவரை இவர், 115 போட்டிகளில் பங்கேற்று 17 கோல்கள் அடித்துள்ளார். கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து அணியின் கப்டனாக செயற்பட்டார். உள்ளூர் கிளப் அணிகளுக்கான போட்டிகளில் விளையாட, முதன்முதலில் 1993 இல் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். தொடர்ந்து அசத்திய இவரை, ரியல் மட்ரிட், லாஸ் ஏஞ்சல்ஸ் கலக்ஸி, ஏ.சி., மிலன் உள்ளிட்ட முன்னணி கிளப் அணிகள் ஒப்பந்தம் செய்தன. இவரது தலைமையிலான மான் செஸ்டர் யுனைட்டட் அணி, 6 முறை பிரிமியர் லீக், இரண்டு முறை எப்.ஏ., கோப்பை,ஒரு முறை யு.இ.எப்.ஏ., கோப்பை வென்றது. தவிர, ரியல் மட்ரிட் அணி ஒரு முறை லா லிகா தொடரில் கோப்பை வென்றது. லொஸ் ஏஞ்சல்ஸ் கலக்ஸி அணி இரண்டு முறை எம்.எல்.எஸ்., கோப்பையை கைப்பற்றியது. கடைசியாக இவர், பாரிஸ் சைன்ட்-ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.,) அணிக்காக விளையாடினார். இவரது ஒப்பந்தத்தை மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்க, பி.எஸ்.ஜி., அணி நிர்வாகம் முடிவு செய்தது. ஆனால், கால்பந்து போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக பெக்காம் நேற்று முன்தினம் அறிவித்தார். இதன்மூலம் இவரது 20 ஆண்டு (1992-2013) கால கால்பந்து வாழ்க்கை முடிவுக்கு வந்தது. இதுகுறித்து பெக்காம் கூறியது: மேலும் ஒரு ஆண்டுக்கு எனது ஒப்பந்தத்தை தொடர முடிவு செய்த பி.எஸ்.ஜி., அணி நிர்வாகத்துக்கு நன்றி. ஆனால், கால்பந்து அரங்கில் இருந்து ஓய்வு பெறுவதற்கு சரியான நேரம் வந்துவிட்டது என நினைக்கிறேன். எனது முன்னேற்றத்துக்கு பெற்றோர், மனைவி விக்டோரியா மற்றும் குழந்தைகளின் ஆதரவு முக்கிய பங்குவகித்தது. போட்டியின் போது உற்சாகப்படுத்தி ஆதரவு தந்த இரசிகர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

Season 6

IPL

கிங்ஸ் லெவன் பஞ்சாப் எதிர் மும்பை இந்தியன்ஸ்
இடம் : ஹைதராபாத்
மாலை 4.00 மணி

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் எதிர் சென்னை சூப்பர் கிங்ஸ்
இடம் : பெங்களூர்
இரவு 8.00 மணி

# காண்டீபன் சகலதுறையிலும் ஜொலிப்பு
# காலிறுதியில் ஜொனியன்ஸ்



(மானிப்பாய்)


காண்டீபனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டத்திற்கு யாழ். ஜொனியன்ஸ் அணி தகுதிபெற்றுள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று கடந்த மூன்றாம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மானிப்பாய் பரிஸ் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி நிதர்சன், வினோத், கிஷோக் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. இந்நிலையில் எட்டாவது விக்கெட்டுக்காகஇணைந்த காண்டீபன், சஞ்சஜன் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுமையாக ஆடினர். சிறிது நேரம் நிலைத்து நின்ற இந்த ஜோடி தொடர்ந்து அதிரடியில் களமிறங்கியது. பரிஸ் அணியின் சகல பந்து வீச்சாளர்களையும் புரட்டியெடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக உயர்த்தியது. அதிரடியில் கலக்கிய காண்டீபன் சதமடித்து அசத்தினார். எட்டாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 175 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. யாழ். மாவட்ட கிரிக்கெட் வரலாற்றில் கழகங்களுக்கிடையிலான போட்டியில் இது ஒரு சாதனையாகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியில் ஜொனியன்ஸ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காண்டீபன் 111, சஞ்சுதன் 58 ஓட்டங்களைக் குவித்தனர். பந்து வீச்சில் நிதர்சன் மூன்று, வினோத், கிஷோக், யாழினியன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 285 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் அணி, வேகமாக ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆடியது. இதன் காரணமாக மானிப்பாய் பரிஸ் அணி விரைவாக விக்கெட்டைப் பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் வினோத், சிஷோக் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து ஆடியதுடன் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ளவும் வழிவகுத்தனர். இறுதியில் மானிப்பாய் பரிஸ் அணி 43.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் வினோத் 38, சிஷோத் 24 ஓட்டங்களைப் பெற்றனர். அதிரடியில் கலக்கிய காண்டீபன் பந்து வீச்சிலும் அசத்தி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் லவேந்திரா இரண்டு, சஞ்சுதன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் யாழ். ஜொனியன்ஸ் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (17)

## தோல்வி – நீக்கம்



இங்கிலாந்தின் மென்ஜஸ்டர் சிட்டி கால்பந்தாட்டக் கழகத்தின் முகாமையாளர் பதவியிலிருந்து ரொபேட்டோ மென்சீனி நீக்கப்பட்டுள்ளார்.

அடுத்த பருவ கால சம்பியன் லீக் போட்டிகளுக்கு தகுதி பெறு-வதைத் தவிர கழகத்தின் எந்தவொரு இலக்கினையும் அடைவதில் அவர் தோல்வி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொபேட்டோமென்சீனி மூன்றரை வருடங்கள் மென்ஜஸ்டர் சிட்டி கழகத்தின் முகாமையாளராக செயற்பட்டிருந்தார்.

அவரின் உதவியாளரான பிரையன் கிட், தற்போதைய பருவகாலத்தின் இறுதி இரண்டு போட்டிகள் மற்றும் அமெரிக்காவிற்கான கோடைகாலப் போட்டிகளுக்கான அணியின் முகாமையாளராக செயற்படவுள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மென்சீனி, ஒரு முகாமையாளராக எனது கடமைகளை சிறப்புறவே செய்து வந்தேன். இதில் அணி நிர்வாகத்திற்கு திருப்தி ஏற்படவில்லை எனில் அதற்கு நான் பொறுப்பல்ல எனத் தெரிவித்தார்.

## விளையாட்டுச் செய்திகள்

# மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்து இறுதியில் கலைமதி, ஆவரங்கால் இந்து

(புத்தூர்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு புத்தூர் கலைமதி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

இலங்கை வங்கி மற்றும் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த 12ஆம் திகதி புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி ஏ,பி என இரண்டு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இதில் ஏ பிரிவுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில்புத்தூர் கலைமதி அணியும், பன்னாலை கணேசன் அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் புத்தூர் கலைமதி அணி ஆரம்பம் முதலே அசத்தியது. சிறப்பாக ஆடிய புத்தூர் கலைமதி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெறவிருந்த இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி போட்டிக்கு சமுகமளிக்கவில்லை. இதன் காரணமாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. ஆண்களுக்கான பி பிரிவுக்கான போட்டிகளும், பெண்களுக்கான அரையிறுதி ஆட்டங்கள் நிறைவுற்றதுமே சகல ஏபிரிவுக்கான இறுதிப் போட்டிகள் நடைபெறும் எனவும், இறுதிப் போட்டி விரைவாக நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள்தெரிவித்துள்ளனர். (93)

# தேசிய மட்ட வலைப்பந்து
## அரையிறுதியுடன் வெளியேறியது யாழ்.மாவட்டம்

(குருநாகல்)

இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி அரையிறுதியுடன் வெளியேறியது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் குருநாகல் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் போட்டிகள் நடைபெற்றன. இதில் பெண்கள் பிரிவின் முதல் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், சாவேலியா மாவட்ட அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே அசத்திய யாழ். மாவட்ட அணி 20-02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் 28-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று யாழ். மாவட்ட அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், குருநாகல் மாவட்ட அணியும் மோதின. இதில் முதல் பாதியில் யாழ். மாவட்ட அணி சிறப்பான முறையில் செயற்பட்டபோதும் பிற்பாதியில் கோட்டைவிட்டது. இறுதியில் 12-28 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி தோல்வியுற்றது.

இதனைத் தொடர்ந்து மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். மாவட்ட அணியும், மொறட்டுவ மாவட்ட அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இருப்பினும் யாழ். மாவட்ட அணி இறுதி வரை போராடியபோதும் 24-26 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியுற்று மூன்றாமிடத்தையும் இழந்தது. (93)




பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட எறிபந்துப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி, பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர் மற்றும் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (17)

அரசாங்கம் வடமாகாணசபை தேர்தலை நடத்துவதா இல்லையா என முடிவெடுப்பதற்கு முன்னரே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு தேர்தல் காய்ச்சல் உருவாகத் தொடங்கிவிட்டது. முதலமைச்சர் பதவிக்காக பலர் அடி-

# வடமாகாணசபை தேர்தலும் கூட்டமைப்பின் உள்நெருக்கடிகளும்

- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து.



படத் தொடங்கியுள்ளனர். முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் பெயர் பலமாக அடிபட்டபோது அவர் நாகரீகமாக ஒதுங்கிவிட்டார். தற்போது மாவை, வித்தியாதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் என மும்முனைப்போட்டி நிலவுவது போல் தெரிகின்றது.

வித்தியாதரனுக்கு இது விடயத்தில் பெரிய அதிருப்தி. சில வருடங்களுக்கு முன்னரேயே அவர் முதலமைச்சர் கனவில் மிதக்கத் தொடங்கி விட்டார். கொழும்புத் தமிழ்ப் பத்திரிகையாளர்களை சம்பந்தனிடம் அழைத்துச் சென்று அவர்கள் மூலம் தன்னை சிபார்சு செய்யுமாறும் வேண்டியிருந்தார். இந்தப் பத்திரிகையாளர் குழுவில் பல மூத்த பத்திரிகையாளர்கள் உள்ளடங்கியிருந்தனர். இக்குழுவில் வீரகேசரி வாரமலர் முன்னாள் ஆசிரியர் தேவராஜ் பங்கு கொள்ள மறுத்தமை வேறு கதை.

பத்திரிகையாளர்களை ஓர் அணியாக தனக்குப் பின்னால் திரட்டி வைத்திருந்ததற்குப் புறம்பாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தினையும் ஒரு பிரசாரத் தள மாக அவர் பயன்படுத்தினார். தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைத் திறந்து அதற்கு செயலாளராகவும் பொறுப்பேற்றார். தந்தை செல்வா நினைவுப் பேருரையையும் தொடக்கி வைத்தார். இந்தியாவும் அவரை முன்னிலைப்படுத்தியதாக ஒரு தகவல்.

இன்று அந்த முயற்சிகள் எல்லாம் கானல் நீராகிப் போய்விடுமா? என்ற கவலை அவருக்கு எழுந்துள்ளது. மாவை ஒரு போட்டியாளராக வந்துள்ளமையே அதற்குக் காரணம். முதலமைச்சராக வரவிரும்புகின்ற வித்தியாதரன் சென்ற உள்ளூராட்சிச் சபை தேர்தலில் போட்டியிட்டு தனது ஆற்றலைக் காட்டியிருக்கலாம். சில அனுபவங்களைக்கூட பெற்றிருக்கலாம். ஆனால் அதற்கெல்லாம் அவர் தயாராக இருக்கவில்லை. எடுத்தவுடனையே பெரிய பதவி கிடைக்கவேண்டும் என்ற ஆசை அவரைத் தொற்றியிருக்கின்றது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் முதலமைச்சர் பதவிக்கு வருவதை தமிழரசுக் கட்சியின் வெள்ளை முடி படைத்த எவரும் அறவே விரும்பவில்லை. அவர்கள் கூட்டமைப்பிலிருந்து சுரேஷை முழுமையாகக் கழற்றி விடுவதிலேயே அக்கறையாக உள்ளனர். தற்போது சுரேஷ் பிரேமச்சந்திரன், தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் வெற்றிபெற்ற உறுப்பினர்கள் சேர்ந்து முதலமைச்சரை தெரிவு செய்யட்டும் என புதிய குண்டொன்றை தூக்கிப் போட்டிருக்கின்றார்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களே அதிகளவில் தெரிவு செய்யப்பட வாய்ப்புண்டு. கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களிலும் கணிசமாக தனக்குச் சார்பான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் என சுரேஷ் பிரேமச்சந்திரன் கருதுகின்றார். இவர்களை வைத்துக் கொண்டு தமது முதலமைச்சர் இலக்கை நிறைவேற்றலாம் என்றும் நினைக்கின்றார்.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இறுதி நேரத்தில் தனக்குக் குழிபறித்து விடுவார்களோ என்ற அச்சம் மாவைக்கு வந்துள்ளது. வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தனக்குப் பெரிய செல்வாக்கு இல்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். இதனால் அவர் நன்கு குழம்பிப் போயிருக்கின்றார். கிளிநொச்சி மே தினக் கூட்டத்திற்கு மக்கள் பெரியளவில் வராமையும் அவரது அச்சத்தை அதிகரித்துள்ளது.

கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை கொள்கை ரீதியானதல்ல. அவர்களின் இருப்புச் சம்பந்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதன் மூலமே தமது இருப்பு பாதுகாக்கப்படும் என்பதால் பதிவு விடயத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவசரம் காட்டுகின்றார். ஆனால் தமிழரசுக் கட்சியினரோ பதிவு தமது முதன்மை நிலையினை இல்லாமல் செய்துவிடும் என்பதால் அதனை கடுமையாக எதிர்க்கின்றனர்.

சுரேஷ் பிரிவினர் தமது நிலைப்பாட்டிற்கு ஒரு வெகுஜன ஆதரவினை எடுப்பதற்காகவே பிரஜைகள் குழுக்கள் உருவாக்கியதுடன் மன்னார் ஆயரையும் சந்தித்துள்ளனர். மன்னாரில் மேதினக் கூட்டத்தையும் வெற்றிகரமாக நடாத்தியுள்ளனர். கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி நடாத்திய மேதினக் கூட்டத்தை விட மன்னாரில் ஏனைய கட்சிகளின் கூட்டு நடாத்திய மேதினத்திற்கு மக்கள் ஆதரவு அதிகமாக இருந்தது.

மக்களின் ஆதரவு ஓரளவுக்காவது கிடைக்கும் என்ற நிலை உருவாகுமானால் ஏனைய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய முற்படலாம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை தமது சின்னமாகவும் கொள்ளலாம். ஆனந்தசங்கரிக்குப் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகும் எண்ணமும் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு உண்டு.

ஏனைய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இணைந்து கொண்டால் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையேதான் தேர்தல் கூட்டு இடம்பெற முடியும். இது இடம்பெறுமானால் பேரம்பேசும் ஆற்றல் தற்போதுள்ளதைவிட ஏனைய கட்சிகளுக்கு அதிகமாக இருக்கும்.

ஒரு பேச்சுக்கு மாகாணசபை முறை தமிழர் தரப்புக்கு ஒரு வலுவான அரசியல் களமாக இருக்கும் என ஏற்றுக்கொண்டால் கூட, அதனை அரசியல் களமாக்கும் ஆற்றல் கூட்டமைப்புக்குள்ளதா? என்கின்ற கேள்வி எழுகின்றது தற்போதைய நாடாளுமன்றத்தையும் கிழக்கு மாகாணசபையையும் உள்ளூராட்சி சபைகளையும் அவர்கள் பயன்படுத்தியிருக்கின்றார்களா? அங்குள்ள கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு கூட்டமைப்பின் தலைமை ஒரு ஒழுங்கான தலைமையை கொடுத்ததா? இதற்கான விடை கவலையளிக்கக்கூடிய ஒன்றாகவே இருக்கும்.

கிழக்கு மாகாணசபை தேர்தலில் கூட்டமைப்பு பங்குபற்றியபோது மாகாணசபை முறையை புறக்கணியுங்கள் அல்லது சுயேட்சைப் பட்டியலில் போட்டியிடுங்கள் என தமிழ் சிவில் சமூகம் கூட்டமைப்பு தலைமையை வேண்டியிருந்தது. இந்த வேண்டுகோள்கள் கணக்கெடுக்கப்படவில்லை. இறுதியில் பிள்ளையானிடம் இருந்த முதலமைச்சர் பதவியை முஸ்லிம் ஒருவரிடம் கொடுத்ததைத் தவிர வேறு ஏதும் நடக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கின்றதோ இல்லையோ, தமிழ்தேசிய அரசியல் உயிர்ப்புடன் நகர்கின்றதோ இல்லையோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கூத்தாட மட்டும் தேர்தல் களம் அடிக்கடி கிடைத்து விடுகின்றது.

---

- சார்லஸ் -

# எல்லாத்துலயும் ஒரு அரசியல் இருக்கு

2




சமகால அரசியலைப் பற்றிக் கருத்துச் சொல்வது என்பது நாம் எப்போதும் செய்துகொண்டிருப்பதுதான். டீக்கடையிலிருந்து ..பேஸ்புக் வரை நாம் அதைத்தான் செய்கிறோம். அதையே நாம் கலைப் படைப்புகளிலும் எதிர்பார்க்கிறோம்.

சோழர் காலத்தில் ஒரு கோயில் மண்டபத்தில் சிலர் உட்கார்ந்து அரசியல் நிலைவரம் நாட்டு நடப்பெல்லாம் பேசினார்கள் என்று வைத்துக்கொள்வோம். பாண்டியன் படையெடுத்து வந்து கைப்பற்றிய பிறகு, அதே கோயில் மண்டபத்தில் வேறு சிலர் உட்கார்ந்து வேறு அரசியல் பேசியிருப்பார்கள். நாயக்கர் காலத்தில் வேறு பேசியிருப்பார்கள், ஜமீந்தார் காலத்திலும் அரசியல் பேசியிருப்பார்கள், சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில், பெரிய அரசியல் கூட்டங்கள் அங்கு நடந்திருக்கும், விடுதலையடைந்த இந்தியாவிலும் அங்கு அரட்டைக் கச்சேரிகள் தினமும் நடந்துகொண்டுதானிருக்கும். ஆனால் பேசப்படும் அரசியலில் தலைகீழ் மாற்றங்கள் நடந்திருக்கும், முன்பு சரியாக இருந்தது இப்போது தவறாக ஆகியிருக்கலாம், முன்பு எதிர்க்கப்பட்டது இப்போது ஆதரிக்கப்படலாம். அதேசமயத்தில், அந்தக் கோவிலில் இருக்கும் சிலைகள், வேலைப்பாடுகள் மிக்க கற்தூண்கள் எல்லாம் ஆயிரம் ஆண்டுகளாக அதே அழகுடனும் கலையம்சத்துடனும் மாற்றமில்லாமல் இப்போதும் இருக்கும் அல்லவா? ஒவ்வொரு காலத்திலும் புதுப்புதுக் குழந்தைகள் அந்த கோர்புரத்தையும் மேல் விதானத்தையும் வியப்புடன் அண்ணாந்து பார்த்திருக்கும் அல்லவா? அதுதான் கலையின் சிறப்பு. சமகால அரசியலைப் பற்றிக் கருத்துச் சொல்வது என்பதை விட, கலை மிகமிகமிக உயரத்தில் நின்றுகொண்டிருக்கிறது.

அதேசமயத்தில், அரசியல் செயல்பாட்டாளர்கள், சமூக மாற்றத்துக்காகப் போராடுபவர்கள், தேசத்தை வழிநடத்துபவர்கள், அவர்களுக்குப் பின் நிற்கும் மக்கள் சக்தி, அவர்களை ஒன்றிணைக்கும் இலட்சியம், கொள்கை என்பனவற்றோடு நான் கலைஞர்களின் செயல்பாட்டை ஒப்பிடவில்லை என்பதையும், கலைஞர்கள் சமூகப் போராளிகளை விட' உயர்ந்தவர்கள் என்று சொல்ல வரவில்லை 'என்பதையும் இங்கு நான் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் செயல்பாடு என்பது எந்தச் சமூக அமைப்பிலும் பிரிக்க முடியாதபடி கலந்திருப்பது. எல்லாருக்கும் அவரவர் அரசியல் முக்கியம்தான். அரசியல் தான் மானுடத்தை மாற்றியமைக்கிறது. மனிதனின் “சர்வைவல்” போராட்டம், குழு மனப்பான்மை, எதிர்க் குழுக்கள் மீதான வன்மம் என்பது கற்காலத்திலிருந்தே மனிதர்களோடு கூடவே இருக்கிறது. அதே குழு அரசியல் தான் இன்றைய நாகரீக சமூகத்திலும் இருக்கிறது. ஆரம்பத்தில் கற்களால் மோதிக்கொண்டவர்கள் இப்போது சொற்களால் மோதிக்கொள்கிறார்கள். அரசியல் இல்லாதவர்களே இல்லைதான். ஆனால், சமகாலத்து அரசியல் எதிர்வினை ஒன்றைச் சுமந்துவரும் நியூஸ் பேப்பர் போலத்தான் கலைப்படைப்பும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது சரியல்ல.

மனிதனுக்கு எதற்குக் கலை? உன்னதத்தையும் கீழ் மையையும் மனிதனுக்கு உணர்த்துவது கலைதான். அறத்தையும் அநீதியையும், அழகையும் அசிங்கத்தையும் அதுவே நமக்குக் காட்டித் தருகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் சிறு குழந்தையாக இருந்ததிலிருந்து கலைகளின் வழியாக, கதைகளின் வழியாகத்தான் மனித மேன்மையை நோக்கி வளரமுடியும். அதுவே கலையின் தேவை.

கிங்கொங் படத்தின் இறுதியில், அந்த மிருகத்தை சங்கிலியில் கட்டி, அடக்கி ஆண்டு, காட்சிக்கு வைத்து காசுபார்க்க நினைக்கிறார்கள். அந்த அரசியல் அடக்குமுறையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்து போராடுவதற்கான வேகத்தை அந்த மிருகம் பெறுவது, அழகின் மீதான ஈர்ப்பினால் தான்.

மனித குலத்தின் கைகள் அரசியல் என்றால், மனித குலத்தின் கனவு தான் கலை. கனவுகள் இல்லாத கைகளால் எதையும் புதிதாக உருவாக்கி விட முடியாது.

(தொடரும்)

# முகமது ரஃபி




ஹிந்திப் படவுலகில் ஏராளமான ஆண் பாடகர்கள் வந்திருக்கலாம். ஆனால் யாரும் முகமது ர.்.பிக்கு ஈடாக இயலாது. 1945-1980 வரை 35 ஆண்டுகள் அவருடைய தேனினும் இனிய பாடல்கள் அனைவரையும் கவர்ந்து இழுத்தன. இன்றும் இழுக்கின்றன! 35 ஆண்டுகளில் 5000இற்கும் அதிகமான பாடல்களை பாடினார். அதாவது சராசரியாக ஆண்டிற்கு 140 பாடல்கள் என்ற எண்ணிக்கையில்.

முகமது ர.்.பிக்கிற்கு ஒரு பழக்கம். வீட்டை மட்டுமல்ல கார்களையும் மாற்றிக்கொண்டே இருப்பாராம்.


அவருடைய மருமகள் யாஸ்மின் அவரைப்பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். அதிலிருந்து ஒரு தகவல்:

ஒருமுறை மசூதி கட்ட ர.்.பி பணம் கொடுத்தார். அதனை திருப்பிக் கொடுத்தனர். “சினிமா பாடல் பாடி சம்பாதித்தது. அதனால் வேண்டாம்” என்றனர்.

வருந்தினார் ர.்.பி! “எனக்கு இந்த இனிய குரலை அளித்தவரே அல்லாதான். அவரைத் தொழ நான் பணம் தரலாகாதா?”

அவர் இறந்து 35 வருடங்கள் ஆகியும் இன்னமும் அவர் குரலை பின் தள்ள ஒரு குரல் வரவில்லை.

# நல்லோர் தொடர்பு...



அந்த ஒட்டகம் மெதுவாகத் தன் மூக்கைக் கூடாரத்துக்குள் நுழைத்தது.

அதைக் கவனித்த அதன் முதலாளி. “சீச்சீ... இங்கே வராதே போ!” என்று கத்தினான்.

“கோபித்துக் கொள்ளாதீர்கள். மூக்கை மட்டுமே உள்ளே வைத்திருப்பேன்” என்றது ஒட்டகம்.

அதற்கு முதலாளி அரை மனதுடன் சம்மதித்தான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஒட்டகம் தன் முகத்தை உள்ளே நுழைத்தது. பின்னர் அது தன் கழுத்து, வயிறு என்று முழு உடம்பையும் கூடாரத்துக்குள் நுழைத்து விட்டது.

ஒட்டகத்தின் நாற்றத்தைப் பொறுக்க முடியாமல், முதலாளி முடிவில் கூடாரத்தை விட்டு வெளியேறினான்.

இப்படித்தான் மனம் நம்மை ஏமாற்றுகிறது. சூட்சுமமாக நமக்குள் மறைந்திருக்கும் வேண்டாத ஆசைகள் பல. சமயங்களில், கடமை, தயை, சேவை என்ற பல பெயர்களை எடுத்துக் கொண்டு பல முகமூடிகளை அணிந்து, நமக்குள் நுழைந்து விடுகின்றன. பின்னர் அவற்றால் நம்முள்ளிருக்கும் நல்லவையெல்லாம் வெளியேற்றப்படுகின்றன.

எனவே நம்முடைய தொடர்பு எப்பொழுதும் நல்லவர்களுடன் மட்டுமே இருக்க வேண்டும்.

# தட்டிவான்

தட்டிவான் ஒருகாலத்தில் பிரபலமான வாகனம். எனக்கு மிகவும் பழக்கப்பட்டது பருத்தித்துறையில் தொடங்கி தெரியவில்லை.

எப்படியும் காலை 7 மணிக்கு நெல்லியடிச் சந்திக்கு வந்துவிடும். சனமாக இரண்டு சீற்றுக்கு இடையில் தேவைப்பட்டால் இன்னொரு பலகை போட்டு அடிசனலாக ஆட்களை இருத்தும் கலை



\- வந்தியத்தேவன் -

நெல்லியடி ஊடாக கொடிகாமம் போகும் தட்டிவான் தான். பிரிட்டிஷ்காரனின் தயாரிப்பு. இந்த தட்டிவானில் பயணம் செய்தால் நீங்கள் உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் வாகனங்களிலும் பயணம் செய்யலாம்.

முதலில் தட்டிவானின் வடிவமைப்பு. முன்பக்கத்தில் மட்டும் கண்ணாடியுள்ள வாகனம். மக்கள் இருக்கும் இடப்பகுதி எல்லாம் திறந்தவெளி. சாவகச்சேரி சந்தைக்கு போகின்ற குஞ்சி ஆச்சி வெத்திலை சப்பித் துப்ப ஏதுவானது. பின்பக்கத்தில் இருக்கும் பலகையில் மீன் பெட்டிகள், மரக்கறி மூட்டைகள் முடிந்தால் மனிதர்களைக்கூட ஏற்றிச் செல்லும் அதிசய வாகனம்.

மினி பஸ் எனும் பின்னைய நவீன வாகனங்கள் சேவைக்கு வந்தபின்னும், தட்டிவான்கள் பாவனையில் இருந்தது, அவற்றின் சிறப்பான மக்கள் சேவைக்கு எடுத்துக்காட்டு. பருத்தித்துறையிலிருந்து, கொடிகாமம் வரை ஒரு சேவை, அச்சுவேலியில் இருந்து பருத்தித்துறைவரை மற்றுமொரு சேவை என இரு பகுதிகளில் நடந்தது. இது தவிர வேறுபகுதிகளில் தட்டிவான்கள் புழக்கத்திலிருந்ததாகத் இருந்தாலும் கொண்டக்டர் விடமாட்டான். “அண்ணை இன்னும் கொஞ்சம் பொறுங்கோ சனம் வரட்டும்” என எப்படியும் அரைமணித்தியாலம் அங்கேயே வைத்திருப்பான். பக்கத்து மொடேர்ன் ஸ்டோரில் பத்திரிகையை நின்று நிதானமாக வாசித்துவிட்டு, சனம் நிறைந்தபின்னர் ஏறும் பலரைக் கண்டிருக்கின்றேன். சிலவேளை ட்றைவரே தனக்கு தெரிந்தவர்களுக்கு “இப்ப எடுக்கமாட்டன் பக்கத்து சங்குண்ணி கடையில் தேத்தண்ணி குடித்துவிட்டு வாருங்கள்” என்பார்.

பெரும்பாலும் ஒரே ஆட்களே தட்டிவானில் பயணிப்பார்கள். இவர்கள் சாவகச்சேரியில் வேலைபார்ப்பவர்கள், கொடிகாமம் சந்தையில் வியாபாரம் செய்பவர்கள் என ஒரே மக்கள் செல்வதால் அவர்களுக்கு பலரையும் பழக்கமாய் இருக்கும். இதனால் ஒருவர் வரப் பிந்தினால் கூட ட்றைவருக்கு உரிமையாக தம்பி ஆச்சி வரவில்லை சின்னத்தம்பி அண்ணை வரவில்லை கொஞ்சம் பொறுங்கள் என கூறுவார்கள்.

சீற்கள் பெரும்பாலும் மரத்தாலே ஆனவை. பின்னுக்கு அரைமுதுகுதான் சாய்ஞ்சு இருக்கமுடியும். அவர்களுக்குத் தெரியும்.


நெல்லியடிச் சந்தியில் அரைமணித்தியாலமாக உறுமிக்கொண்டே இருக்கும். சிலவேளைகளில் வெளிக்கிடுவதுபோல் எடுத்து அப்படியே பஸ் ஸ்ராண்டை ஒரு சுற்றுச் சுற்றி திரும்ப அதே நிண்ட இடத்தில் கொண்டுவந்து நிப்பாட்டுவார்கள். சிலவேளை சீரிபி தூரத்தில் வருகின்றது என்றால் மட்டும் உடனே எடுத்துப்போடுவார்கள். ஆனாலும் கோயில்சந்தை, அந்தணத்திடலில் சில நிமிடங்கள் எப்படியும் நிண்டுதான் எடுப்பார்கள்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதித் திருவிழா நேரத்தில் நெல்லியடியிலிருந்து கோவில்வரை ஸ்பெசல் சேர்விஸ் விடுவார்கள். அந்த அனுபவமும் சுவையானது. இதனை விட அச்சுவேலியில் இருந்தும் தட்டிவான் சில இடங்களுக்குச் செல்வது. ஏனைய மாவட்டங்களில் நான் தட்டிவான் கண்டதில்லை. வவுனியா, திருகோணமலை, நுவரேலியாப் பகுதியில் சிறிய வான்களில் மக்களை அடைந்து கொண்டு செல்வதைக் கண்டிருக்கின்றேன். கஸ்டமான பயணம் என்றாலும் நம் மக்கள் மகிழ்ச்சியுடன் பயணிப்பார்கள்.

# நீர்ச் செல்வம்

நமது முன்னோர்கள் மழைக்காலங்களில் மழை நீரைச் சேமிக்க நிறைய வகையிலான நீர் நிலைகளையும் அவற்றின் பயன்பாட்டுக்குரிய அழகிய பெயர்களையும் வைத்திருந்தனர். அரண்மனைகளில் பெய்யும் மழை நீரைச் சேமிக்க கோட்டைக்கு வெளியே அகழ்ந்து அமைக்கப்பட்ட நீர் நிலைக்கு “அகழி” என்றும், பலவகைப் பயன்பாடுகளுக்கு உரிய நீர் நிலைக்கு “இலஞ்சி” என்றும், கடலருகே தோண்டிக் கட்டிய கிணற்றுக்கு “ஆழ்கிணறு” என்றும் ஊருக்குள் பெய்யும் மழை நீரை தேக்கும் பெரிய நீர் நிலைக்கு “சிறை” என்றும், ஊற்று நீர் பொழிந்து வாய்க்கால் வழியோடும் நீரை “ஓடை” என்றும் கால்நடைகளை நீராட்ட அமைத்துள்ள நீர் நிலைக்கு “குட்டை” என்றும் ஆழமற்ற பள்ளத்தில் தேங்கிய நீரை “கூவல்” என்றும், மலைகளில் இயல்பாய்க் கசியும் நீர் நிலைக்கு “சுனை” என்றும் கோயிலில் நீராடுவதற்கு அமைக்கப்பட்ட நீர் நிலைக்கு “திருக்குளம்” என்றும் பெயர் வழங்கிப் பாதுகாத்த நீர் நிலைகள் நகர மயமாக்கலில் சாலைகளாய், விளையாட்டுத் திடலாய், வீட்டு மனைகளாய் முறையற்ற வளர்ச்சியில் காணாமல் போயின.

எதிர்காலத் தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டிய நீர்ச் செல்வத்தின் கடைசி கையிருப்பையும் நாம் காலி செய்து கொண்டிருக்கிறோம். பருவ மழை பொய்த்துவிடுவதும் நீர் ஆதாரம் தூர்த்து வருவதும், இடு பொருள்களின் விலையேற்றமும், விளை பொருள்களுக்குரிய விலையின்மையும், சீரற்ற மின் பகிர்மானமும், விளை நிலத்தைத் தரிசாக்கி விவசாயமில்லாத பயன்பாடுகளுக்கு கை மாற்றுகிறது. மனம் தளர்ந்த விவசாயிகள் எந்த மண்ணில் விளைந்தார்களோ, எந்த மண்ணில் விதைத்தார்களோ, அந்த மண்ணையள்ளி செங்கல்



செய்கிறார்கள். ஆற்றுப்படுகைகளில் செங்கல் சூளைகள் அமைக்கப்படுகின்றன. பயிர்களுக்கு உயிர் தரும் மண்ணின் உயிரை எரிக்கும் அவலத்திற்கு ஆளாகிப் போனார்கள் விவசாயிகள். உலக மயம், தனியார் மயம், தாராளமயக் கொள்கைகள் நாளெல்லாம் நலிந்து கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு எந்தப் பயனையும் அளிக்காது.

(‘இறகுதிர் காலம்’ நூலிலிருந்து)

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# சந்தைப்படுத்தலில் சாவு மணி!

"யாழ். மாவட்டத்தில் சென்ற வருடம் மாத்திரம் 15 ஆயிரம் பேர் புற்றுநோயாளிகள் என இனங்காணப் படடுள்ளனர். இவர்களில் பலர் இறந்து விட்டனர். இதற்கான காரணங்களை துருவி ஆய்வு செய்த இடத்தில் பல காரணங்கள் இதற்கு மூலமாக இருப்பினும் மிகப் பெரிய காரணியாக இருப்பது உணவுப் பொருட்கள் உள்ளிட்ட மரக்கறிகளுக்குப் பாவிக்கப்படும் இரசாயனப் பதார்த்தங்களே. இது தொடர்பாக சுகாதாரப் பிரிவு அதிகாரிகளிடம் வினவியபோது,

### சுகாதாரப்பிரிவினரின் கருத்து

இரசாயனப் பசளைகள், கிருமி நாசினிகள் சேர்க்கப் பட்டு 7 நாட்களின் பின்னரே சந்தைப்படுத்த வேண்டும். இது வளியுடன், வளியில் உள்ள நீராவியுடன் சேர்க்கையடையும்போது இதன் தாக்கம் சற்றுக் குறைக்கப்படும். ஆனால் விவசாயிகள் அவ்வாறு செய்வதில்லை.

பல தேவைகளுக்காக இந்த இடைவெளிகளைமீறிச் சந்தைப்படுத்துகின்றனர். இது பாரிய விளைவுகளைத் தற்போது ஏற்படுத்தி வருகின்றது. உடனடியாக இதில் மாற்றம் தேவை என்பதே இவர்களின் கருத்தாகும்.

### விவசாயிகளின் நியாயப்படுத்தல்

எமது சந்தைப்படுத்தல் பலவழிகளில் தற்போது சீரழிந்துள்ளது. ஒவ்வொருநாளும் விலை மாற்றங்கள், வருவாய்க்கு மீறிய செலாவணிகள், நியாயமற்ற கூலி அதிகரிப்புக்கள், இடைத்தரகர்கள் வரித்தொல்லைகள், அர்த்தமற்ற தொழிலாக இது மாறியுள்ளவேளை இவற்றை எல்லாம் எம்மால் பார்க்க முடியாதுள்ளது. கிருமிக்காக அழிவிற்குப் பயந்து கிருமி நாசினியைத் தெளிக்கின்றோம். விலையிறக்கம் ஏற்பட்டு விட்டால் பாரிய நஷ்டம் என்கின்ற பீதியில் உடன் சந்தைப்படுத்துகின்றோம். இதில் நாமென்ன செய்யமுடியும்.



### தீர்வு

உயிர்ச்சேதமோ, புற்றுநோய் போன்ற கொடிய நோய்களோ மக்களுக்கு ஏற்படுத்தும் காரணிகளைச் சரியென பின்னணிகளைச் சுட்டிக்காட்டி நியாயப் படுத்த முடியாது. விவசாயிகளின் துன்பங்கள் பல துருவங்களில் இருந்தாலும், மரணத்தின் மத்தியில் சிலரது வாழ்க்கைப் போராட்டத்தை நியாயப் படுத்த முடியாது. உடனடியாக இதில் மாற்றம் தேவை. சந்தைப்படுத்தலில் இலாப், நஷ்டம் இருப்பினும் 7 நாட்களிற்கு முன் எந்தப் பொருளையும் சந்தைப் படுத்த முடியாது என்பதில் சுகாதாரப் பிரிவினர் இறுக்கமாக இருக்க வேண்டும். சந்தை நிர்வாக மூடாக இது கண்காணிக்கப்பட வேண்டும். நவீன கருவிகள் மூலம் சநதைக்குள் வரும் பொருடகளைப் பரிசோதனை செய்ய வேண்டும்.

இது தவிர வேறு மாற்று வழிகளையும் மக்கள் சிந்திக்க வேண்டும். வீட்டுத்தோட்டம் என்கின்ற ஓர் சிறப்பான செயற்பாடு தற்கால இயந்திர உலகாலும், இட வசதி இன்மையா லும் அற்றுப் போய் விட்டது. இது பல பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் கொண்டு வரும் ஒன்று. உடலாரோக்கியத்திற்கான சிறந்த தேகப்பியாசமாக அமையும். மற்றையது, தூய உணவு வகை உடல் நலத்தை மேன்மையுறச் செய்யும். இந்தச் செயற் பாட்டைப் புதுப் பொலிவூட்ட அனைவரும் சிந்திக்க வேணடும். மேற்சொன்ன பிரச்சினைக்கு இதுவும் ஒரு துருவத்தில் தீர்வாக அமையும் இன்னு மோர் மாற்றம் வேண்டி நிற்கும் மக்கள் பிரச்சினையோடு அடுத்த வாரம் சந்திப்போம்.

வெண்கட்டியன்

---



## புதிர்ப்போட்டி 44

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

புதிர்ப்போட்டி 44 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 23.05.2013

### புதிர்ப்போட்டி 42 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- அ.றொமிலா
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- வி.எழில்
தரம் :- 08 - பாடசாலை:- யா/ கொக்குவில் ஞானபண்டிதர்

பெயர் :- ம.துஷிகெஸ்ரன்
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- பு.கோபிகா
தரம் :- 08 - பாடசாலை:- யா/ தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

### புதிர்ப்போட்டி 43 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- ம.வினோலியா
தரம் :- 10 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி.

பெயர் :- ந.நந்தினி
தரம் :- 12 - பாடசாலை:- யா/ யூனியன் கல்லூரி.

பெயர் :- அன்ரன் ராஜ் நியூட்டன்
தரம் :- 13 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- தோ.கோமஸ்ராஜ்
தரம் :- 08 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு சீக்கியாம்பள்ளம்.

பெயர் :- அ.றொமிலா
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- க.நவமதி
தரம் :- 10 - பாடசாலை:- யா/ கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்.

பெயர் :- ற.தனுசன்
தரம் :- 06 - பாடசாலை:- யா/ நவாலி மகா வித்தியாலயம்.

### புதிர்ப்போட்டி 43 இற்கான சரியான விடைகள்

1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | ற | 2 வை | | | 3 ப |
| த் | | 4 ய | ன் | ன | ல் |
| 5 தி | ங் | க | ள் | | |
| ரி | | ம் | | 6 க | றி |
| 7 கை | தி | | 8 வ | ண் | டு |

2

1) 2865 X
2) 9574 V
3) 2N17 V
4) 3 L 26 X
5) 20 L 2 M
6) 5 N 36 V
7) 3 L 16V
8) 5 M 75 X
9) 3 V 34 V
10) 9056 X


3

1) இளங்கோ அடிகள்
2) வான்மீகி
3) கம்பர்
4) சேக்கிழார்
5) உமறுப்புலவர்
6) வியாசர்
7) வில்லிபுத்ரர்
8) மாணிக்கவாசகர்
9) வீரமாமுனிவர்
10) மகா நம
11) மகாத்மா காந்தி
12) சுப்பிரமணியபாரதி

### 1

1) உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?
2) உலகின் மிகப்பெரிய கம்யூனிச நாடு எது?
3) உலகில் மிகப்பெரிய இஸ்லாமிய நாடு எது?
4) உலகில் ஒரேயொரு இந்துமத நாடு எது?
5) ஆசியாவிலேயே ஒரேயொரு கிறிஸ்தவ நாடு எது?
6) உலகில் சனத்தொகை குறைந்த நாடு எது?


கீழ்வரும் வினாக்கள் பின்வரும் வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டவை. அதில் உள்ள சதுரங்கள், முக்கோணிகள், வட்டங்கள் ஆகியவை முறையே ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்களைக் குறித்து நிற்கின்றன. ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடையை அதற்குரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.




1) படத்தில் சிங்கள மொழி மட்டும் பேசும் மக்களைக் குறிக்கும் இலக்கங்கள் யாவை? ( ------------------------ )
2) தமிழ்மொழி மட்டும் பேசும் மக்களைக் குறிக்கும் இலக்கங்கள் யாவை? ( ------------------------ )
3) தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளை மட்டும்பேசும் மக்களைக் குறிக்கும் இலக்கங்கள் யாவை? ( ------------------------ )
4) ஆங்கில மொழியைப் பேசும் மக்களை மட்டும் குறித்து நிற்கும் இலக்கங்கள் யாவை? (------------)

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர் :- ..................................
பாடசாலையின் பெயர் ..................................
தரம் :- :- ..................................
தொலைபேசி இல.:- ..................................
முகவரி :- ..................................
..................................



# யுத்தத்தை எதிர்கொண்ட மக்களுக்கு

# அபிவிருத்திகள் மறக்கமுடியாதவை

## - அமைச்சர் றிசாட் பதியுதீன்

(வவுனியா)

கடந்த 30 வருடகால கசப்பான யுத்தத்தினால் துன்பங்கள் மாறாது வாழும் எமது மாவட்ட மக்களுக்கான அபிவிருத்திகள் மறக்க முடியாதவையாக உள்ளது என வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

மடுவுக்கான புகையிரத சேவையின் ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எமது மாவட்டத்தில் வாழும் பெரிய பிள்ளைகள் கூட தமக்கு இரயிலைத் தெரியாது, அதில் பயணம் செய்யவில்லை என்று சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். இதற்குக் காரணம் எமது பகுதியில் இருந்த புகையிரதப் பாதைகள் யுத்தத்தினால் சிதைக்கப்பட்டமையேயாகும். இப்பயணங்கள் கடந்த காலங்களில் சொல்லொணாத்துன்பங்களையும் தந்திருந்தன.

தற்போது சமாதானம் ஏற்பட்டதன் பின்னர் வடக்கின் அபிவிருத்தி, வடக்கின் வசந்தம் என்பதன் ஊடாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் வடமாகாணம் சிறந்த அபிவிருத்திகளைப்பெற்று வருவதை நாம் காணக் கூடியதாக உள்ளது.


வடக்கின் அபிவிருத்திக்காக நாம் கோரும் அனைத்து வேலைத்திட்டத்திற்குமாக ஜனாதிபதியும் கூட கோடி கோடியான நிதிகளை ஒதுக்கித் தருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் கட்டுக்கரைக் குளத்தின் புனரமைபிற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த அரசாங்கம் தந்துதவியதன் அடிப்படையில் இம்மாவட்ட விவசாயிகள் அபிவிருத்தியைக் கண்டுள்ளனர்.

அதேபோல் யாழ்ப்பாணத்தையும், மன்னாரையும் இணக்கும் பாதையும், அனுராதபுரத்தில் இருந்து மன்னாரை இணைக்கும் பாதையும் பல கோடி ரூபா பெறுமதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேளையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து இவ்வாறான அபிவிருத்திகளைப் பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

(160)

## விசேட கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் மனித உரிமை இல்லத்தின் ஏற்பாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான கருத்தரங்கு அண்மையில் 'இணையும் கரங்கள்' சனசமுக நிலையத்தில் நடைபெற்றது.

யாழ்.அராலி வீதியில் ஜே/87 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்காக நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கில் மனித உரிமை இல்லத்தைச் சேர்ந்த தீ.அ.அருள்நாதம் ரேணுகா, குறித்த பிரிவு கிராம அலுவலர் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

(105)

## நடமாடும் சேவை

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளதுடன், இதில் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட சேவைகள் மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

எனவே குறித்த பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்கள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(55)

# பொலிஸாருக்கு எதிராக ஆலய பரிபாலனசபை முறையீடு

(யாழ்ப்பாணம்)

கனகராயன்குளம் பொலிஸாருக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையத்தில் இயங்கும் வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக குழுவிற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்திருப்பதாக வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் கி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி தமது காரியாலயத்திற்கு இந்த முறைப்பாடு கிடைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், புற்குளம் கண்ணகையம்மன் ஆலய பரிபாலனசபையினரினாலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த முறைப்பாட்டில் நீதிமன்றத் தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்தவிடாது கனகராயன்குளம் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுடன் இந்த வருடம் இதுவரை மூன்று முறைப்பாடுகள் வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைத்திருப்பதாகவும் அவற்றில் நெல்லியடி மற்றும் அச்சுவேலிப் பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகளும் அடங்குவதாகவும், யாழ். செயலகத்தில் இயங்கும் வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பணிப்பாளர் க.சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

(பா)

## அஸ்வமேத மஹாயாகம்

காரைநகர் புகலி சிவசுப்பிரமணிய ஆலய நித்திய உற்சவ பூர்த்தியும், அஸ்வமேத மஹர்யாகமும், சுவாமி வீதி ஊர்வலமும் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஜுன் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சுட்டிவேரம் அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சுட்டிவேரம் அம்மன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு ஆலயம் வந்தடையும். தொடர்ந்து 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆலயத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு காரைநகரை வலம் வரும். 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.25 மணிக்கு அஸ்வமேத மஹாயாகக் கிரியை ஆரம்பமாகி 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மகாயாகம் இடம்பெறும்.

ஜுன் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை இறுதிநாள் கிரியைகள் நடைபெற்று, விசேட பூசையும் தொடர்ந்து சுவாமி வீதி வலம்வருதலும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட 108 மாணவர்களின் நாட்டிய நிகழ்வும் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

# வாரம் ஒரு காரம்

## எங்கள் வாக்குகள் எங்கள் வாழ்க்கைக்கு...

ஓர்மங்களையும் உணர்வுகளையும் சுமந்து அடிப்படை உரிமையாகிய வாக்களிக்கும் உரிமையைக்கூட கட்டாயத்தின் பேரில் கைவிட்ட மக்கள் நாம், இன்று அதன் பலன்களை அனுபவிக்கின்றோம். அடுத்தவரின் அரசியல் இலாபத்திற்காக எங்கள் வாக்குகளை சுய விருப்புக்கப்பால் தொலைத்தவர்கள் நாம் இனிவரும் காலங்களிலாவது எங்கள் வாக்குகளை எங்கள் வாழ்க்கைக்காக மாற்றுவோம்.

தமிழ் மக்கள் அரசின் அனுசரணை இன்றி எந்த உரிமைகளையும் வென்றெடுக்க முடியாது. என்பதை இக்கட்டுரை சொல்ல வேண்டிய அவசியமில்லை. நடந்து முடிந்த இழப்புக்களும், துன்பங்களும், துயரங்களும் சொல்கின்றது. இதைத் தெளிவாக ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். அரசின் சார்பாக இருந்து தமிழ் மக்கள் ஆங்காங்கே பெற்ற உதவிகளையும், அரசை எதிர்த்து தமிழ் மக்கள் ஆங்காங்கே பட்ட அவலங்களையும் ஆழமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். யாருக்காகவும் சிந்திக்கவேண்டாம் உங்கள் எதிர்காலத்தை இறந்த காலத்தோடு சிந்தித்துப்பாருங்கள் யாருக்கூடாக எம்மை நாம் வாழவைக்கும் அரசியலை அமைக்க முடியும் என்பது புரியும். ஐக்கிய நாடுகள் சபை கூட இலங்கையின் இறைமைகுள் இறங்க முடியாமல் இருக்கும் போது எதிர்க் கோசம் எழுப்பி எப்படி நாம் எதை சாதிக்க முடியும்? என்பது பற்றி நிதானமாக யோசித்துப்பார்க்க வேண்டும். இது ஒருபுறமிருக்க

கற்பனாவாத அரசியற சிந்தனை வாதிகள் யார்?... யதார்த்த அரசியற்சிந்தனைவாதிகள் யார்?... யாருடைய அரசியற்பார்வை தோற்றது?... யாருடைய அரசியல் பயணம் மக்களிற்கு சேவை செய்தது?... யாருடைய அரசியற் பயணம் மக்களை அவலத்துக்குள் ஆழ்த்தியது என்று சிந்தித்துப் பாருங்கள். அச்சுறுத்தல்கள் ஆயுத முனைகளிற்குப் பயந்து அடைக்கலம் புகுந்து அரசியல் நடாத்தியவர்கள் தாங்களே தலையாட்டும் பொம்மைகளாக வாழ்கின்றோம். என்பதை ஒப்புக் கொண்டவர்கள் தற்போது மக்களைப் பணயமாக வைத்து வீரம்பேசும் போது மயக்கம் மேடையில் வருவது தவிர்க்க முடியாது.

எதிரிகளைப் புதிது புதிதாய் உருவாக்கியபடியும், வெறுப்பை உசுப்பேத்தி வளர்த்தும், நம்மையழித்துப் பகைமுடிக்கும் மடைமையுசாரை ஊட்டியும், வாழக்கிடைத்த வாய்ப்புகளை உதறிவிட்டு அழிவுவரை வீரக்கூத்தாடியதும், இன்று கிழித்தெறிந்த பொதிகளை விடக் கீழான பொதிக்குக் கூப்பாடு இடுவதும், அதைப் பெறவும் வக்கற்ற அரசியல் வங்குரோத்தைக் காட்டிக்கொண்டிருப்பவர்கள் யார்?

வெற்று வீரவசனங்கள் பேசி, மக்களை முள்ளிவாய்க்கால் வரை ஏமாற்றி அனுப்பிவிட்டுத் தாங்கள் தப்பியோடிப்போய் ஒளித்துவிட்டுத் திரும்பி வந்திருப்பவர்களையும் - துன்பத்தின் விளிம்பில் இருந்து உயிரிற்குப் போராடியும் துப்பாக்கி முனைகளிற்கு அஞ்சாது மக்களுடனேயே நின்று ஆங்காங்கே பொசிகின்ற அரசியல் இலாபத்தை தமிழ் மக்களிற்குப் பெற்றுக் கொடுக்க மூச்சாய் நின்றுழைப்பவர்களின் தியாகத்தையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

சுயநிர்ணய உரிமை சுதந்திரவாழ்வு எனும் பேரில் போராடிய நாம். ஒவ்வொரு தமிழ் மகனின் சுதந்திர வாழ்விற்கும் வழிசமைத்தோமா? பிள்ளையை மண்ணுக்குள் புதைத்து மறைத்துவைத்து மண்புழுக்கள் பிள்ளைகளின் தோல்களை சிதைத்து வைத்தியசாலைக்கு அனுமதித்த வரலாறுகளெல்லாம் வன்னியில் நடந்தது மறக்க முடியாது. தனிமனித விருப்பங்களிற்கு அப்பால் பிள்ளைகளைப் பிடித்து தனித்தமிழீழம் அமைக்கும் அம்புலிப்பருவ அரசியலிற்கு அனுசரணையாக இருந்தவர்கள் எந்த முகத்துடன் தமிழ் மக்கள் முன் மீண்டும் வந்து நிற்கின்றார்கள் என்பது புரியவில்லை.

தமிழ் மக்கள் உட்பட அனைவரும் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும் பிரச்சினைகளை மெருகூட்டிச் சொல்லிக்கொண்டு இருப்பதன் மூலம் சிலர் தமிழ் தேசியத்தை காக்கின்றோம் என மக்களை ஏமாற்றுகின்றார்கள். செயற்பாடற்ற சொற்பிரயோகங்கள் நீண்ட நாட்களிற்கு நிலைக்காது என்பதை தற்போது பெரும்பான்மை மக்கள் புரிந்து விட்டார்கள். அழிவுகளைத் தவிர இவர்களது கோரிக்கைகளால் எதுதான் நிறைவேறியது?...

- வெண்கட்டியன்

# பிரிவினைவாதமற்ற கட்சிகள் வடக்கில் வென்றால் ஆதரவு

## என்கிறது ஜாதிக ஹெலஉறுமய



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி போன்ற பிரிவினைவாதமற்ற எந்தக் கட்சியும் வடக்கில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினால் அதனை ஜாதிக ஹெல உறுமய விரும்பும் எனவும் இவ்வாறான கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்ற செல்வதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாட்டை வீசுபவர்களாக மாறுவதே நடக்கும் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு எந்த அடிப்படையிலான ஜனநாயகத்தை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். ஆடம்பர ஜனநாயகத்தை வடக்கிற்கு வழங்கக் கூடாது. வடக்கில் படிப்படியாக ஜனநாயகம் ஏற்படுத்தப்படவேண்டும்.

வட மாகாண சபைத் தேர்தலை சர்வதேசத்தின் அழுத்தங்களின் அடிப்படையில் நடத்தினால், அதனை பிரிவினைவாதிகளுக்கு வழங்க நேரிடும். 30 வருடங்கள் நடைபெற்ற போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, 4 வருடங்களில் சிவில் நிர்வாகம் என்பதை உடனடியாக ஏற்படுத்தி விட முடியாது.

ஜே.வி.பி.யினரின் ஆயுதப் போராட்டம் 83 ஆம் ஆண்டு முதல் 89 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இந்த நிலைமை மாற்றியமைக்க 93, 94 ஆம் ஆண்டுகளில் கூட முடியாது போனது. வட மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் மனது பிரிவினைவாத திசை நோக்கியே இருந்தது. அவ்வாறான இனப் பிரிவுக்கு ஆடம்பரமான ஜனநாயகத்தை உடனடியாக வழங்க வேண்டும் என எவராவது கூறுவார்களேயானால் அவர்கள் அரசியலை அறியாதவர்கள்.

வடபகுதி மக்களை மீள்குடியேற்றும் பணிகளை பாதுகாப்புப் படையினர் துரிதமாக மேற்கொண்டனர். வடக்கில் வழமை நிலையை ஏற்படுத்த சில காலம் செல்லும். வடக்கில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். வடக்கில் முகாம்களிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் இருந்த மக்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளை அளித்து அரசாங்கம் அவர்களை சமூகத்தில் இணைத்தது.

வட்க்கின் பாதுகாப்பு நிலைமையை மேலும் வலுவானதாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். வடக்கிலோ, தெற்கிலோ, அரசாங்கம் காணிகளை கையகப்படுத்த வேண்டும். அரசாங்கத்திற்கு கையகப்படுத்த தேவை எனில் அந்தக் காணிகளுக்கு இழப்பீடுகளை வழங்கி அவற்றை பெற்றுக் கொள்ள வேண்டும்.

வடக்கில் ஜனநாயகமானது முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட வேண்டும். வடக்கில் அரசியல் நடவடிக்கைகளை செயற்படுத்தும் போது, இனவாத, பிரிவினைவாத அரசியல் செயற்படுத்தப்படுகிறது என்றால் அவற்றுக்கு இடமளிக்கக் கூடாது.

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாத அரசியலை முன்னெடுத்து வருகிறது.

மாகாண சபைத் தேர்தல் என்ற போர்வையில், பிரிவினைவாதத்தை தேர்தலில் பெற்றுக் கொள்வதே அவர்களின் தேவையாக உள்ளது எனவும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழில் உதயமானது மூவின நட்புறவுச்சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வதியும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் நட்புறவுச் சங்கமொன்று கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் வதியும் மற்றும் வருகை தரும் மூவின மக்கள் மத்தியிலும் புரிந்துணர்வையும், நட்புறவையும், கௌரவத்தையும் வளர்க்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வதியும் மூவின சமூகத்தையும் சேர்ந்த நண்பர்களால் இச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் இதர நோக்கங்களுள் சிலவாக யாழ்ப்பாணத்தில் வதியும் மற்றும் வருகை தரும் சகல தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களும் சந்தித்து நட்புறவை வளர்க்க ஏற்பாடு செய்தல், யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் சகல சமூக மக்களும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் யாழ். சமூகத்தின் ஒரு பாகமாக தங்கி இருந்து திரும்ப இயலுமான ஏற்பாடுகளைச் செய்தல், மற்றும் சகலரும் மும்மொழிகளிலும் பரிச்சயமாக ஊக்குவித்தல் எனக் குறிப்பிடப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சாமிநாதன் விமல் (விரிவுரையாளர்), ஹர்சா தொம்பகல (பொறியியலாளர்), டாக்டர் தினமித்ர (மருத்துவர்), டாக்டர் நிசங்க (மருத்துவர்), அப்துல் ஜமால் மொகிதீன் (தொழிலதிபர்), செல்வி சர்மிலா ஹனீபா (சமூக சேவகி), செல்வி அப்துல் றுசீயா ( சமூக சேவகி), சூரியசேகரம் (பொறியியலாளர்), ஜோர்ஜ் (ஆசிரிய ஆலோசகர்), சிவபாலன் (வங்கியாளர்), ரெங்கன் (சட்டத்தரணி) ஆகியோர் சங்கத்தின் நடப்பாண்டிற்கான செயற்பாட்டுக்குழு உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் முதல் வேலையாக சங்கத்தின் நோக்கங்களை ஏற்றுக்கொண்டு அங்கத்தவர்களாகும் சகலரும் சந்தித்து கலந்துரையாடுவதற்கும் பரஸ்பர நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கும் யாழ். நகரில் வசதியான கட்டடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண சரித்திரத்தில் இதுவே முதலாவது மூவின நட்புறவுச் சங்கமெனக் கூறப்படுகிறது.

# 3 பிள்ளைகள் கொலை வழக்கு ஆவணங்கள் நீதியமைச்சிற்கு

## விளக்கமறியலில் தந்தை

(கொழும்பு)

மன வளர்ச்சி குன்றிய தனது பெண் பிள்ளைகள் மூவரை கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தந்தைக்கு எதிரான வழக்கு விசாரணையின் ஆவணங்கள் நீதியமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வழக்கின் பிரதிவாதியான அந்த மூன்று பிள்ளைகளின் தந்தை தொடர்பில் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே அந்த வழக்கின் ஆவணங்கள் நீதியமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி வழக்கு விசாரணை யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கு விசாரணை ஆவணங்களை நீதியமைச்சருக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் உத்தரவிட்டார்.

அளவெட்டி பெரியவளவு பகுதியில் மன வளர்ச்சி குன்றிய தனது 3 பெண் பிள்ளைகளை கடந்த 1998ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதி கொலை செய்த குற்றச்சாட்டில் பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை விஜயகுமார் என்பவரை தெல்லிப்பளை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இவரின் மூன்று பிள்ளைகளான விஜயகுமார் லோஜினி, விஜயகுமார் தயானி மற்றும் விஜயகுமார் லிங்காதேவி ஆகியோரே கிணற்றில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவார்.

அத்துடன், மூத்தமகளான விஜயகுமார் லோஜினி (வயது 19) என்பவரின் வயிற்றில் 24 வாரம் கொண்ட ஆண் சிசு இருந்ததாகவும் குறித்த பெண் மன வளர்ச்சி குறைபாட்டினை கொண்டுள்ளதாகவும் சட்ட வைத்தியர் ராம் மனோகா 1998 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பித்த பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், விஜயகுமார் தயானி (வயது 15) மற்றும் விஜயகுமார் லிங்காதேவி (வயது 17) ஆகிய ஏனைய இரு பிள்ளைகளும் மன வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்துள்ளதாகவும், கிணற்றில் நீரில் மூழ்கியே உயிரிழந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி சார்பில், உறவினர்கள் இருவர் சாட்சியமளித்துள்ளனர்.

தந்தையான கணபதிப்பிள்ளை விஜயகுமாரின் மைத்துனன் சாட்சியமளிக்கையில்,

மூன்று பிள்ளைகளின் சடலங்களும் மீட்கப்பட்ட தினத்தன்று கணபதிப்பிள்ளை விஜயகுமார் நஞ்சு அருந்திய நிலையில் வீட்டில் படுத்திருந்ததாகவும், இவர்களின் குடும்பத்தில் பரம்பரையாக ஆண்கள் மனவளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வழக்கின் பிரதிவாதியான மூன்று பிள்ளைகளின் தந்தை சித்தசுவாதீனமுற்றவர் என்பது வைத்தியசான்றுகள் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ள காரணத்தினால், குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை பிரிவு 381இற்கு அமைவாக பிரதிவாதி தொடர்பான அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக வழக்கின் ஆவணங்களை நீதியமைச்சருக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் உத்தர விட்டார். நீதியமைச்சரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கும் வரை பிரதிவாதியை விளக்கமறியலில் வைக்குமாறும் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். (25)

# வடக்கு ஆசிரியர்களுக்கு நிலுவைக்கொடுப்பனவு



வடமாகாணத்தில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வட மாகாண ஆளுநர் செயலகத்தில் நடை பெற்றது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கான நிலுவைக்கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார்.

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களுக்கான முற்திகதிக்கொடுப்பனவு மற்றும் பதவி உயர்வு போன்றவற்றிற்கான கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படாது நிலுவையில் இருந்துள்ளது.

இது குறித்து ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து வடமாகாண ஆளுநரினால் இக்கொடுப்பனவிற்கென 130 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயத்திலும் இக்கொடுப்பனவு வழங்குவதற்கு 2017 பேர் தெரிவு செய்யப்பட்டு இந்த நிலுவைக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவு வழங்கும் நிக்ழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர செல்வராசா மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (02)

# கதிரகாம பாதயாத்திரை சந்நிதியிலிருந்து ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அம்பாறை காரைதீவு வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரைக் குழுவினர் செல்வச்சந்நிதி பிரதம குருக்களிடமிருந்து ஆசி பெற்று வேலையும் பெற்றுக் கொண்டனர். இதனை முன்னிட்டு நேற்றுமுன்தினம் விசேட பூசையும் இடம்பெற்றது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை 55 நாட்களில் கதிர்காமத்தை சென்றடைய உள்ளது. இக்குழுவினர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கலிலும் கலந்து கொள்வதுடன் திருகோணமலை, வெருகல், மட்டக்களப்பு, திருக்கோவில் பாணமை ஊடாக கதிர்காமத்தைச் சென்றடைய உள்ளனர்.



29. பொருள் ஒன்றின் விலை குறியீட்டு வடிவில் KMV.MP எனக் குறிக்கப்பட்டிருந்தது. பொருளின் விலையை குறிக்கும் விடையைத் தெரிவு செய்க
1) 435.00  2) 638.75  3) 352.50

30. 
இவ்வுபகரணம் எத்தொழிலுடன் தொடர்புடையது.
1) விவசாயம்  2) மட்பாண்டம்  3) மீன்பிடி

31. 
பொது இடங்களில் காணப்படும் சில குறியீடுகள் குறிக்கும் கருத்தை தெரிக.
1) ஆண்கள் மட்டும்  2) பெண்கள் மட்டும்  3) பாதசாரிக்கடவை

32. 
1) இங்கேபுகைக்கலாம்
2) புகைத்தல் உடல் நலத்துக்கு தீங்கு
3) புகைத்தல் தடை

33. 
1) சிற்றுண்டிச்சாலை
2) பீங்கான் தொழிற்சாலை
3) கரண்டிகள் விற்குமிடம்

தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கருத்துள்ள வாக்கியத்தை அமைக்க முடியும். அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட விடையின் கீழ் கோடிடுக.

A - வாழவே  B - மிருகங்கள்  C - விரும்புகின்றன  D - சுதந்திரமாக

1) D,B,C,A  2) B,D,A,C  3) B,C, A,D

35. A - படுத்திருக்கும்  B - போலக்  C - சிகிரியா  D - சிங்கம்  E - காட்சிதரும்

1) B,C,A,E,D  2) C,E,A,D,B  3) C,A,D,B,E

**36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

36. இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறவுள்ளன? ..............................

37. நான் விளையாடிய விளையாட்டில் ஒரு அணியில் 6 பேர் விளையாடுவர். இலங்கையின் தேசிய விளையாட்டாகிய இவ்விளையாட்டின் பெயர் யாது? ..............................

38. | 3 1 2 / 9 6 / 5 8 4 7 |
கட்டத்தில் உள்ள இரட்டை எண்கள் எத்தனை? ..............................

39. கட்டத்தில் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

40.

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | 31 | 27 | 24 | .......... |

புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1 மணி 30 நிமிடம்





# கல்வி முரசு

தமிழ்


ஆசிரியர்:- A.K.S. நிஸானா ஹில்மி


முதலில் தரப்பட்ட உருவை ஒத்த உருவைத் தெரிந்து கோடிடுக.

1) 
(1) (2) (3)

2) 
(1) (2) (3)

**3 ஆம் 4 ஆம் வினாக்களில் அடுத்துவரும் உருவைத் தெரிந்து கோடிடுக.**

3) 
1) 2) 3)

4) 
1) 2) 3)

**புள்ளிக்கோட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.**

5. அவர்கள் எங்களை தம்மை நோக்கி வருமாறு ......................
1) அழைத்தார்கள்  2) அழைத்தீர்கள்  3) அழைத்தோம்

6. ........................ ஓவியங்களை ஒத்த ஓவியங்கள் இலங்கையிலும் உள்ளன.
1) சிகிரியா  2) அஜந்தா  3) மோனலிசா

7. இன்று உலகின் ........................... எங்கும் கணனியின் ஆதிக்கமே
1) மேடுபள்ளம்  2) மூலைமுடுக்கு  3) காடுமேடு

8. பிழையான கருத்து இடம்பெறும் விடையின் கீழ் கோடிடுக.
1) காலையில் தாமரை மலர்கள் மலர்ந்தன.
2) தினமும் சூரியன் கிழக்கு வானில் உதிக்கும்.
3) காகம் ஓர் தாவர உண்ணி

9. 1) பூக்கள் யாவும் காய்களை உருவாக்குகின்றன.
2) இலங்கையின் நீளமான நதி மகாவலி கங்கை
3) இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.


**தரப்பட்ட தொடர்பை அவதானித்து அதற்கேற்ப தொடர்புள்ள விடையின் கீழ் கோடிடுக.**

10. பானை - மண்
1) கதிரை - தளபாடம் 2) செருப்பு - இறப்பர் 3) பேருந்து - டீசல்


11. நான் - தன்மை ஒருமை
1) நீங்கள் - படர்க்கை பன்மை
2) அவன் - படர்க்கை பன்மை
3) நீ - முன்னிலை ஒருமை

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**


12. எட்டு உச்சிகளையும் ஆறுமுகங்களையும் உடைய திண்ம உருவைத் தெரிக.



13. மூன்றுக்கு பத்து நிமிடம் என்பதை காட்டும் கடிகார முகத்தைத் தெரிக.



14. 1 kg 500g சீனியை 250g கொண்ட எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்.
1) 10 2) 6 3) 4

15. 
உருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 16 2) 27 3) 30

16. மடக்கேறும் அரவும் என்னும் உயிர்க்குறியைக் கொண்ட சொல் எது?
1) சூரியன் 2) கொம்பு 3) நூலகம்

17. வானம் மீதெழுவேன் - அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கான மலையெல்லாம் - யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்.

இப்பாடல் யார் பாடுவதாக உள்ளது.
1) ஓர் விமானம்
2) ஓர் பட்டம்
3) ஓர் பறவை

18. "நாளை மறுநாள் கொழும்புக்கு வருவேன்" என விமல் நேற்றுக் கூறினான். அதன்படி விமல் கொழும்புக்கு செல்வது.
1) இன்று 2) நாளை 3) நேற்று

19. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.
1) கப்பல், மீன், மீனவன்
2) படகு, கரை, மீன்
3) கரை, நீர், மீன்



20. 548 + 31A = 8B2
A, B என்பவை குறிப்பவை முறையே
1) 4, 6 2) 6, 3 3) 4, 5

**A,B,C, D ஆகிய கட்டங்களில் தரப்பட்டுள்ள சொற்களை அவதானியுங்கள். அதற்கேற்ப தரப்பட்ட வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து கோடிடுக.**


| A | B | C | E |
|---|---|---|---|
| நாய்<br>சருகுமான்<br>கழுகு<br>காகம் | தேனி<br>தும்பி<br>வண்ணாத்துப்பூச்சி<br>வீட்டு ஈ | கொக்கு<br>முதலை<br>கிவி<br>பல்லி | பூனை<br>கோழி<br>ஆமை<br>சிங்கம் |

21. ஆறு கால் பிராணிகள் மட்டும் அடங்கிய அடைப்பை தெரிக.
1) A 2) B 3) C

22. அனைத்தும் உண்ணிகள் இரண்டு வீதம் அடங்கிய அடைப்பைத் தெரிவு செய்க.
1) A உம், D உம் 2) B உம், C உம் 3) A உம், C உம்


23. முட்டையிட்டு இனம் பெருக்கும் பிராணிகள் உள்ள அடைப்புக்கள் எவை?
1) B உம், D உம் 2) D உம், C உம் 3) B உம், C உம்

**கீழே தரப்பட்ட கணித செய்கையின் படி 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**



24.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 9 2) 13 3) 11

25.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 6 2) 7 3) 10

26. 
கம்பித்துண்டு ஒன்றைப் பயன்படுத்தி செய்யப்பட்ட முக்கோணியை உரு காட்டுகிறது. இந்த கம்பித்துண்டைப் பயன்படுத்தி செய்யப்பட்ட சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?
1) 8 cm 2) 6 cm 3) 5 cm


வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய கணிதச் செய்கைக் குறியீடுகள் எவை?

27.


| | | | | |
|---|---|---|---|---|
| 3 | | 4 | = | 7 |
| 15 | | 5 | = | 10 |
| 15 | | 3 | = | 5 |

1) + − ÷ 2) + − × 3) + × ÷

28. கோயிலில் மங்கள வாத்தியமாக இசைக்கப்படும் இசைக்கருவியைத் தெரிக.



# வயதுகுறித்த புதிய சர்ச்சையில் சிக்கியுள்ள பிரதமர் மன்மோகன்சிங்



(கவுகாத்தி)

பிரதமர் மன்மோகன் சிங்கின் வயது எண்பதா? எண்பத்தி இரண்டா? என்ற புதிய சர்ச்சை தற்போது தலைதூக்கியுள்ளது.

நாடாளுமன்ற மேல்சபைத் தேர்தலில் போட்டியிட பிரதமர் மன்மோகன் சிங் அசாம் சட்ட சபை செயலாளரிடம் கடந்த புதன்கிழமை வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் வயது தொடர்பாக குறிப்பிட்ட அவர், தனக்கு 82 வயதாவதாக கூறியுள்ளார்.

ஆனால், பிரதமரின் இணையத் தளம் மற்றும் நாடாளுமன்ற இணையத் தளம் ஆகியவற்றில பிரதமரின் பிறந்த திகதி 26-09-1932 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலின்படி, பிரதமரின் தற்போதைய வயது 80 ஆண்டுகள் 8 மாதம் தான் ஆகிறது. ஆனால், கடந்த வாரம் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பிரதமர் தனக்கு 82 வயதாவதாக குறிப்பிட்டுள்ளதால் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

07-05-2007 அன்று கடந்த முறை ராஜ்யசபை உறுப்பினர் பதவிக்காக போட்டியிட்ட மன்மோகன் சிங், தனது வயது 74 என குறிப்பிட்டிருந்தார். இந்தக் கணக்கின்படி பார்த்தாலும் வேட்பு மனுத் தாக்கல் செய்த போது பிரதமருக்கு 81 வயது தான் முடிந்திருக்கும்.

இது தொடர்பாக, அசாம் சட்டசபை செயலாளர் ஜி.பி. தாஸ் தெரிவிக்கையில், "பிரதமரின் வேட்பு மனுவை பெற்றுள்ளோம் அதில் உள்ள விபரங்களை ஆராய்ந்து மே 21ஆம் திகதிக்குள் முடிவெடுப்போம்" என்றார்.




# சி.பி.ஐ.அமைப்பிற்கு தன்னாட்சி அதிகாரம்



சி.பி.ஐ. அமைப்புக்கு மத்திய அரசு தன்னாட்சி அதிகாரம் வழங்கும் என்று நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

சி.பி.ஐ. அமைப்புக்கு தன்னாட்சி அதிகாரம் அளிப்பது குறித்து பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ள எனது தலைமையிலான மத்திய அமைச்சர்கள் குழு, விரைந்து பரிசீலித்து சி.பி.ஐ.க்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கும். ஆனாலும், சி.பி.ஐ.க்கு கண்காணிப்பு அமைப்பு ஒன்று வேண்டும். அந்த அமைப்பு உச்ச நீதிமன்றத்தின்கீழ் செயல்படும். அதாவது, சி.பி.ஐ.யின் விசாரணையில் எந்த ஒரு அமைப்பும் தலையிட முடியாத வகையில் தன்னாட்சி அதிகாரம் வழங்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

# ஆப்கன் ஜனாதிபதி இந்தியா வருகை

(புதுடில்லி)


ஆப்கானிஸ்தான் - இந்திய பாதுகாப்புக் கூட்டு நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமித் கர்சாய் வரும் 20ஆம் திகதி இந்தியா வருகிறார். இந்தத்தகவலை இந்தியாவுக்கான ஆப் கானிஸ்தான் தூதர் சயிதா எம் அப்தாலி தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,



அதிபர் கர்சாய் மே 20 முதல் 22ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். ஆப்கானிஸ்தான் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தற்போது சிறிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. இந்தப் பயணத்தின் போது, இது குறித்து இந்தியத் தலைவரகளின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வார். இரு தரப்புக்கும் முக்கியமான விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளன. இந்தப் பிராந்தியத்தில் அமைதியையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்யும் முக்கிய பொறுப்பில் இந்தியா இருக்கிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் வெளியேறவுள்ள நிலையில் இந்தப்பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது இவ்வாறு 'அவர் கூறினார்.

# மனைவி நினைவாக குட்டித் தாஜ்மகால்



ஷாஜகான் அவரது மனைவி மும்தாஜ் நினைவாகக் கட்டிய தாஜ் மகாலைப் போலவே ஒரு சிறிய தாஜ்மகாலை முதியவர் ஒருவர் அவரது மனைவி நினைவாகக் கட்டிவருகிறார். இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர், பைசுல் ஹசன் காதிரியின் (77), மனைவி பேகம் டாஜ்முல்லி. இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு காலமானார்.

மனைவியின் மறைவிற்கு பிறகு அவரது நினைவாக ஒரு சிறிய தாஜ்மகாலைக் கட்ட ஆரம்பித்துள்ள பைசுல், அவருக்கு சொந்தமான 5000 சதுர அடி நிலத்தில், ஆக்ராவில் உள்ள நிஜ தாஜ்மகாலை போலவே அளவில் மட்டும் சிறிய தாஜ் மகாலை கட்டிவருகிறார். இதுவரை இந்த குட்டி தாஜ்மகாலுக்கு ரூ.20 இலட்சம் (இந்திய ரூபாய்) வரை செலவு செய்துள்ள இவர், அவரது மனைவியின் நினைவகம் இந்த குட்டித் தாஜ்மகாலின் மையப் பகுதியில் அமையுமாறு வடிவமைத்துள்ளார்.

மனைவி மீது கொண்ட அதீத அன்பால், குட்டி தாஜ்மகாலை கட்டிவரும் பைசுல், தான் இறந்தபிறகு தன்னையும் மனைவியின் அருகில் அடக்கம் செய்யவேண்டுமென உயில் எழுதிவைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# சிறையில் தூக்கத்தை தொலைத்தார் சஞ்சய்தத்

(மும்பை)

மும்மையில் 1993ஆம் ஆண்டு இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஆயுதங்களை தனது வீட்டில் பதுக்கி வைத்திருந்த வழக்கில் குற்றவாளியாக இனங்கானப்பட்ட நடிகர் சஞ்சய்தத் நேற்றுமுன்தினம் பிற்பகல் மும்பை தடா நீதி மன்றில் சரணடைந்தார். பின்னர் அவர் மும்பை ஆர்தர் வீதி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு ஒரு மாதத்திற்கு வீட்டு சாப்பாடு, மெல்லிய படுக்கை விரிப்பு, தலையணை மற்றும் மருந்துகள் வழங்குவதற்கு மும்பை நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அதன்பின்னர் அவருக்கு இந்தச் சலுகை தொடருமா என்பதை சிறை அதிகாரிகள் முடிவு செய்வார்கள். இதேபோல் சிறையில் மின்னணு சிகரெட்டுகளை புகைக்க அனுமதி அளிக்க வேண்டும் என்றும் சஞ்சய்தத் மனு செய்திருந்தார். அந்த மனுவை நீதிமன்றம தள்ளுபடி செய்தது.

சிறையில் சுதந்திரமாக நடமாடவும், தன் குடும்பத்தினர் தன்னை சந்திக்கவும் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த கோரிக்கை தொடர்பாக நீதிமன்றில் இன்னும் முடிவு செய்யவில்லை. இந்நிலையில் சஞ்சய்தத் தனது சிறைவாசத் முதல் நாள் இரவு அனுபவம் தொடர்பாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்றிரவு 11 மணியளவில் சிறையில் அவருக்கென ஒதுக்கப்பட்ட அறைக்கு சஞ்சய்தத் அழைத்துச் செல்லப்பட்டார். வீட்டில் இருந்து அனுப்பப்பட்ட உணவை சாப்பிட்ட பின்னர், குடிப்பதற்கு அவர் தண்ணீர் கேட்டார்.

சிறை அதிகாரிகள் ஒரு போத்தலில் தண்ணீர் தந்தனர். அதன் பின்னர், தூங்கச் சென்ற சஞ்சய்தத், இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்ததாகவும், சில முறை எழுந்து உட்கார்ந்தபடியே சிந்தித்துக் கொண்டிருந்ததாகவும் சிறை ஊழியர்கள் தெரிவித்தனர்.



# "அம்மா" என்று அழைப்பதால் பெருமைப்படும் ஜெயலலிதா



வயது வித்தியாசம் பார்க்காமல் அனை வரும் "அம்மா" என்று அழைப்பதை பெருமையாக கருதுகிறேன் முதல்வர் ஜெயலலிதா தெரி வித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சட்டசபையில் தமிழகஅரசின் ஈராண்டு சாதனைகளைப் பாராட்டி உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்து முதல்வர் ஜெயலலிதா பேசினார். அதில் அவர் கூறியதாவது, எனது வாழ்க்கையில், போராட்டங்கள் நிறைந்த எத்தனையோ பட்டங்களையும், விருதுகளையும் பெற்றிருக்கிறேன். ஆனால் கிடைத்தற்கரிய பெரிய பேறாக நான் கருதுவது எல்லோரும் வாய் நிறைய அம்மா என்று அழைப்பதுதான். வயது என்னவாக இருந்தாலும், பெரியவர்கள், இளையவர்கள், குழந்தைகள் அனைவருமே என்னை "அம்மா" என்று அழைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். எல்லோருக்கும் நல்ல அம்மாவாக இருந்து கடமை ஆற்ற வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அம்மாவின் அன்பு தன்னலமற்ற அன்பு, சுயநலம் இல்லாத அன்பு.

தமிழக மக்கள் நலனே என் நலன் என்று கூறி, தமிழக மக்களுக்கும், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என ஜெயலலிதா கூறினார்.

## அரசியல்...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

கேள்வி : இப்போது இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை செய்ய வேண்டியது என்ன?

ஜி.ஆர் : இன்னும் தமிழகத்தில் இனவாத உணர்வைத் தூண்டிக்கொண்டிருப்பது இலங்கையில் சிக்கலில் இருக்கும் தமிழ் மக்களுக்கு மேலும் தீங்கு விளைவிக்கும் என்பதை உணர வேண்டும். தமிழ் நாட்டுக் கட்சிகளும் அமைப்புகளும் தம் அரசியலுக்காக அல்லாமல் உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களுக்கு இப்போது என்ன தேவையோ 'அதற்கான முழக்கங்களை முன்வைத்து இந்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். அதீதமான கோரிக்கைகளைக் கைவிட்டு யதார்த்த நிலைமைக்கேற்ப குறைந்தபட்ச செயற்திட்டத்தோடு பேச வேண்டும்.

கேள்வி: இலங்கைக்குள் எந்த மாற்றமும் நடக்காமல் நமக்கு எப்படி நம்பிக்கை வரும்? இந்திய அரசு போல ஒரு ஏற்பாடு இலங்கையில் இல்லையே? அங்கு ஜனாதிபதி பதவி அதீத அதிகாரத்துடன் இருக்கிறதே?

ஜி.ஆர் : ஆம். உண்மை தான் ஆனாலும் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தி மக்களைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் அங்கு இருக்கத்தானே செய்கிறது. இன்றைய அடக்குமுறைச் சூழலில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக எண்ணம் கொண்டவர்களும் பேசத் தயங்குகிற நிலை உள்ளது. ஆனால் உயர்கல்வியைத் தனியார் மயமாக்கும் சட்டத்தை சமீபத்தில் இலங்கை அரசு கொண்டு வந்த போது தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் ஒன்றுபட்டுப் போரா்டி அச்சட்டத்தை திரும்பப்பெற வைத்துள்ளனர். அதீத முழக்கங்களால் நாம் அங்குள்ள தமிழர்களைத் திசை திருப்பக் கூடாது. பொருளாதார ரீதியாக இலங்கை அரசின் கொள்கைகளால் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவது தவிர்க்க முடியாது. கால அவகாசம் எடுக்கலாம். இக்கூட்டில் தான் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வும் பிறக்கும்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தலை துண்டிப்பில் சவுதி அரசு சாதனை



சவுதி அரேபிய நாட்டில் இந்த ஆண்டு மட்டும் 40 பேருக்கு தலைதுண்டிக்கப் பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சவுதி அரேபியாவில் கொலை, பாலியல்வல்லுறவு, கொள்ளை உள்ளிட்ட குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களை தலையைத் துண்டித்துக் கொல்கிறார் கள்.

இந்த ஆண்டு கடந்த 4 மாதத்தில் 40 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் கடைசியாக நஜ்ரான் பகுதியில், மனேடயேன் என்பவருக்கு கொலைக் குற்றத்திற்காக தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு 76 பேருக்கு பல்வேறு குற்றங்களுக்காக தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மரண தண்டனைகளின் எண்ணிக்கை முதல் நான்கு மாதங்களிலேயே 40 ஆக அதிகரிப்பது, அங்கு குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டுகிறது.

# பங்களாதேஷைத் தாக்கிய "மகாசென்"

# பத்து இலட்சம் மக்கள் இடப்பெயர்வு

## -45 பேர் உயிரிழப்பு எனவும் தகவல்

பங்களாதேஷைத் தாக்கிய மகாசென் புயலால் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் 45 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



வங்கக் கடலில் உருவான மகாசென் புயல் வங்காளதேசம் மற்றும் மியான்மர் நாடுகளை நோக்கி நகர்ந்தது. அது பலவீனம் அடைந்து வங்காளதேசத்தில் சிட்டகொங் அருகே கரையை கடக்கும் என அறிவிக்கப்பட்டது. அப்போது சிட்டகொங், காக்ஸ்பஜார் ஆகிய கடற்கரை பகுதிகளில் பலத்த காற்று வீசியது. அத்துடன் மழையும் கொட்டியது. இதனால் மரங்கள் வேருடன் சாய்ந்தன.

ஆயிரக்கணக்கான வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. ஏராளமான வீடுகளின் சுவர்கள் இடிந்து சேதம் அடைந்தன. கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வெள்ளப் பகுதிகளில் இருந்து 10 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக வங்காளதேச அரசு அறிவித்துள்ளது.

அதேநேரத்தில் 08 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து வாழ்க்கைத் தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. மகாசென் புயல் தாக்கியதில் 45 பேர் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். புயல் மழையில் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியிலும், நிவாரணப் பணிகளிலும் வங்காளதேச அரசு தீவிரமாக உள்ளது.

கடற்படை கப்பல்கள் மற்றும் இராணுவ ஹெலிகொப்டர்களும், இராணுவ வீரர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வங்காளதேசத்தைத் தாக்கிய புயலின் பாதிப்பு மியான்மரிலும் எதிரொலித்தது. அங்குள்ள ராஹின் மாகாணத்தில் பலத்த மழை பெய்தது. அப்பகுதியில் இருந்து சுமார் 1 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# ஆற்றில் இறங்கிய விமானம்; ஆறுபேர் கவலைக்கிடம்

(காட்மாண்ட்)

நேபாள நாட்டில் பசுமை மிக்க மலைகள் சூழ்ந்த ஏராளமான சுற்றுலா இடங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக அன்னபூர்ணா பகுதியில் மலை ஏறும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் அங்கு வெளிநாட்டுப் பயணிகள் குவிகின்றனர்.

இந்நிலையில் நேபாள நாட்டிலுள்ள சுற்றுலாத் தலமான பொக்காரா என்ற இடத்திலிருந்து நேபாள ஏயர்லைன்ஸ் விமானம் ஒன்று புறப்பட்டது. அதில் 3 விமானிகள், 8 ஜப்பான் நாட்டினர் உட்பட 21 பேர் பயணம் செய்தனர்.

இந்த விமானம் காலை நேற்று முன்தினம் காலை 8.30 மணி அளவில் ஜோம்சோம் விமான நிலையத்தில் தரை இறங்கியது. ஆனால் விமானம் எதிர்பாராத விதமாக ஓடு பாதையில் இருந்து விலகிச் சென்று அருகேயுள்ள காளி கண்டகி ஆற்றில் இறங்கியது.

இந்த விபத்தில் விமானிகள் உட்பட 9 பேர் படுகாயம் அடைந்தனர். ஏனையவர்கள் சிறிய காயத்துடன் அதிர்ஷ்டவசமாகத் தப்பினர். காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 6 பேர் கவலைக்கிடமாக உள்ளனர்.

# ஈரான் ஜனாதிபதியாக பெண்கள் வரமுடியாது

## - மதகுரு அறிவிப்பு

(தெஹ்ரான்)

ஈரானில் வரும் ஜூன் மாதம் ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் சுமார் 30 பெண்கள் போட்டியிட எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கும் வகையில், அந்நாட்டின் மதத்தலைவர் ஆயுதுல்லா முகமது யாஸ்டி, ஜனாதிபதித் தேர்தலில் பெண்கள் வேட்பாளராக நிற்க வாய்ப்பு இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஈரானின் அரசியல் அமைப்பிலும் கூட ஆண்கள் தான் ஜனாதிபதியாக வரமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் நாடாளுமன்றத் தேர்தலில் பெண்கள் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு சென்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் எழுதிய கடிதத்தால் கண்ணீர் சிந்திய ஆஸி.பிரதமர்



அவுஸ்ரேலியாவில் மக்கள் எழுதிய கடிதத்தைப் படித்து விட்டு, பிரதமர் ஜூலியா கில்லர்ட் அழுதது சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கில்லர்ட் மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்கத் கூடிய சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தார். இந்தத் திட்டத்திற்கு கடுமையாக எதிர்ப்புக் கிளம்பியதைத் தொடர்ந்து, இந்தத் திட்டத்தால் ஏற்படக் கூடிய நன்மைகளை விளக்கினார்.

மக்களின் வாழ்வில் சாத்கமான தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தத் திட்டம் குறித்து கில்லர்ட் பேசிக் கொண்டிருக்கும்போது உணர்ச்சிவசப்பட்ட ஜூலியா, குயின்ஸ்லேண்டர்ஸ் நகர மக்கள் தங்களது கையெழுத்திட்டு அனுப்பிய கடிதத்தைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அழுதார்.

ஜூலியா பேசி முடித்து அமர்ந்த பின்னர், தொழிலாளர் கட்சியினர் மற்றும் மாற்றுத் திறனாளி வழக்கறிஞர்கள் 20 பேர் எழுந்து நின்று கரவொலி எழுப்பினர்

# இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகிறது சிரியா

## - ஆதாரம் உள்ளதாகக் கூறும் ஒபாமா

சிரியா இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியமைக்கான ஆதாரங்கள் காணப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந்த இரசாயனத் தாக்குதல் தொடர்பில் மேலும் முக்கியமான தகவல்கள் திரட்டப்பட வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாவும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர மற்றும் இராணுவ அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, ஹெலிகொப்டர் மூலம் சிரிய படையினர் இரசாயன ஆயுதங்களைக் கொண்டு மக்களை தாக்கியதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை சிரியா முழுமையாக நிராகரித்துள்ளது.

சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டு வன்முறைகளினால் இதுவரையில் சுமார் 80,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

# சிரியாவில் 11 இராணுவ வீரர்கள்; கண்ணைக்கட்டி சுட்டுக்கொலை

(டமாஸ்கஸ்)

சிரியாவில் அதிபர் ஆசாத்தின் படை வீரர் ஒருவர், இறந்து கிடந்த போது, அல்-நுஸ்ரா இயக்கப் போராளி ஒருவன், அந்த வீரனின் நெஞ்சைக் கத்தியால் கிழித்து, இதயத்தை சுவைப்பது போல் எடுத்த காட்சிகள் சமீபத்தில் இணையத் தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

அதன் தாக்கம் தணிவதற்குள், யூ.டியூபில் வெளியிடப்பட்டுள்ள மற்றொரு காட்சி மனதை உறைய வைத்துள்ளது.

போராளிகளுக்கு எதிராக அதிபர் ஆசாத் நிறைவேற்றிய படுகொலைகளை நடாத்துவதில் பெரும்பங்கு வகித்ததாகக் கருதப்பட்ட 11 பேர், புரட்சி படையினரான அல்-நுஸ்ரா இயக்கத்தைச் சேர்ந்த ஜிகாதி போராளிகளால் சுட்டுக் கொல்லப்படுவது போன்ற காட்சி யூ. டியூபில் வெளியிடப்பட்டுள்ளது.



11 வீரர்களும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக மண்டியிட்டு அமரச் செய்யப்பட்டுள்ளனர். கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் அவர்கள் முழங்காலிட்டு குனியும் போது, பின்னால் இருக்கும் ஒருவன் அவர்களின் பின்னந் தலையில் சுட்டுக் கொல்வதாக காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இரண்டு இஸ்லாமியப் போராளிகள், அவ்வீரர்களின் பின்னால் கறுப்பு நிறக் கொடியினைப் பிடித்துக்கொண்டு, ஒவ்வொரு வீரனும் இறக்கும் போது கோஷமிடுகிறார்கள்.

டெயிர் அல் சாரின் கிழக்குப் பகுதியில் உள்ள ஷரியா நீதிமன்றம், சிரியாவில் உள்ள நமது சகோதரர்களையும் அவர்களது குடும்பத்தையும் அழித்த இவர்களுக்கு மரண தண்டனை அளிக்கின்றது என்று, இந்த தண்டனையை நிறைவேற்றிய போராளி தெரிவிப்பதாக காட்சிகள் முடிவடைகின்றன.

# நயினாதீவு வருடாந்த உற்சவம் ஏற்பாடுகள் துரிதம்

(வேலணை)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு வருகை தரவிருக்கின்ற யாத்திரிகர்களுக்கான அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து, அதற்கமைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராயும் முகமாக கடந்த 14 ஆம் திகதி மதியம் 12.00 மணியளவில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நயினாதீவு ஆலய வளாகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தீவகத்தில் உள்ள தனியார் சிற்றூர்தி உரிமையாளர்கள், சுகாதார துறைசார்ந்த அதிகாரிகள், மின்சாரசபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், கிராம அலுவலர்கள், ஆலய அறங்காவலர் சபையின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் எனப் பல் துறைசார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய சாலையில் இருந்து எவரும் கலந்து கொள்ளவில்லை.

இவ்வருடம் இடம்பெறவிருக்கின்ற ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தினங்களை எல்லோரும் ஒன்றிணைந்து மிகச் சிறப்பான முறைகளில் நடைபெறுவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியுதவும்படி தலைமை வகித்து உரையாற்றிய வேலணை பிரதேச செயலர் அனைவரிடமும் கேட்டுக் கொண்டார்.

சுகாதாரப் பகுதியினரும் சென்ற வருடங்களைப் போல இவ்வருடத்திலும் தங்களினது சேவைகளை வழங்குவதாகக் கூறினர்.

ஆலயத் திருவிழாக் காலங்களில் ஆரம்பத்தில் இருந்து உற்சவங்கள் முடியும் வரை உள்ள காலப்பகுதியில் ஆலயச் சூழலில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதோ அன்றி மதுபானங்கள் அருந்திய நிலையில், யாரேனும் காணப்பட்டால் அவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவித்த பொலிஸார், மேலும் இது பற்றிய தகவல்களையும், ஒத்துழைப்புக்களையும் பொது மக்களாகிய நீங்களும் இந்த விடயங்களில் ஒத்துழைக்க முன்வரவேண்டும் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

ஏனைய அனைத்துச் சேவைகளும் சென்ற வருடங்களைப் போலவே அந்தந்தச் சேவைகளுக்குப் பொறுப்பான ஸ்தாபனங்கள், திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள் என்பன செயற்படும் எனவும், மக்கள் நலம்சார்ந்த சேவைகளுக்கென மக்கள் நலன்புரிச் சங்கம், பரியோவான் முதலுதவிப் படை, சாரணர், இலங்கை முதலுதவிப் படை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உட்பட பாடசாலை மாணவர்களது சேவையும் இணைத்து செயற்படவுள்ளன.

மேலும் திருவிழாக் காலங்களில் குறிகாட்டுவான், நயினாதீவு இறங்கு துறைகளுக்கிடையிலான மோட்டார் படகுச் சேவைகள் இரவு 8.00 மணி வரையும் நடைபெறுவதுடன், சப்பறம், தேர், தீர்த்தோற்சவம் நடைபெறும் நாட்களில் இரவு 12.00 மணி வரை மோட்டார் படகுச்சேவைகளும் இடம்பெற உள்ளது.

இதேநேரத்தில் யாத்திரிகர்களினது போக்குவரத்துச் சேவையின் வசதிகருதி தனியார் சிற்றூர்திச் சங்கத்தினரும், இரவு 8.00 மணி வரை தங்களது சேவைகளை விரிவுபடுத்த முன்வந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

அமுத சுரபி அன்னதான சபையினரால் ஆலயத்தில் கொடியேற்றம் முதல் தெப்பத் திருவிழா வரை அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயத்தின் கொடியேற்றம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் கையிலைக் காட்சியும், இரவு பெரிய சப்பரத் திருவிழாவும், 22 ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தோற்சவத் திருவிழாவும், 24 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு தெப்பத் திருவிழாவுடன் உற்சவங்கள் நிறைவடையவுள்ளன. (05, 175)

# தயா மாஸ்டரை கை கழுவியது ஐ.தே.க.

(கொழும்பு)

எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுவதற்கு புலிகளின் முன்னாள் ஊடக இணைப்பாளர் எடுத்த முயற்சி பிசுபிசுத்துப் போனது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டரின் மேற்படி கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட தயா மாஸ்டர் கோரியதாகவும், அதனை நிராகரித்ததாகவும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த போது இது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தப் பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியையும், புலிகளையும் இணைத்து பல்வேறு சேறு பூசல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படும் வரையில் தேர்தலில் போட்டியிடுவது பொருத்தமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்களுடன் தேர்தல் தொடர்புகளைப் பேணுவதில்லை என கட்சி தீர்மானித்துள்ளதாக ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை தேர்தல் ஏற்பாடுகள் தயார்

## நீதிமன்ற அனுமதிக்காக காத்திருப்பு

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் நீதிமன்றத்தின் அனுமதிகிடைத்தவுடன் விரைவில் நடைபெறும் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முஹமட் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் மக்கள் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்று தெரிவித்து நீதிமன்றத்தின் ஊடாக தற்காலிக தடையுத்தரவு பெறப்பட்டது இந்த நிலையில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் முழுமையாக மீள் குடியேற்றம் நடைபெற்றுள்ள நிலையில் இரண்டு சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். (02)

## நடும்பத்துடன்...

த்ததை அடுத்து வவுனியாப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் அளிக்கையில் கூறியதாவது, கடந்த ஒரு வருட காலத்திற்கு முன்னர் சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு இவர்கள் வாடகைக்கு குடியேறியிருந்தனர்.

இவர்களுக்கு இரு ஆண் பிள்ளைகளுடன் 3 பெண்பிள்ளைகள் உள்ளனர். வறுமை காரணமாக நேற்று முன்தினம் கிராம அலுவலரின் உதவியை இவர்கள் நாடிச் சென்றுள்ளனர். இந்நிலையில், இவர்கள் தொடர்பில் கிராம அலுவலரால் பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், சில மணி நேரங்களின் பின்னர் இவர்கள் மீண்டும் வீடு திரும்பியிருந்தனர். ஆனால் இவ்வாறான ஓர் சம்பவம் இடம்பெறும் என நாம் எண்ணவில்லை என பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜே.ஜயக்கொடியிடம் கேட்ட போது அவர் கூறுகையில், நேற்று முன்தினம் கிராம அலுவலரால் தாயொருவரும், 3 பிள்ளைகளும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார்.

அதன் பிரகாரம் சிறுவர்களைச் சிறுவர் காப்பகம் ஒன்றில் அனுமதிக்குமாறும் தாயார் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தமையினால் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இந்நிலையில், இக்குழந்தைகளின் தந்தையை அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடினோம். இதன்போது தனது மூன்று பிள்ளைகளையும் காப்பகத்தில் விடுமாறும் அவரால் கோரப்பட்டதுடன், மனைவி மனநலம் பாதிக்கப்பட்டுள்ளமையினால் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும்படியும் கோரிக்கை விடுத்தார்.

எனினும், பிள்ளைகளை அவர்களின் பாட்டியினுடைய வீட்டில் விடுவதற் கான ஒழுங்குகள் எம்மால் மேற்கொள் ளப்பட்டு அவர்களது வீட்டிற்கு உளநல ஆலோசகர் மற்றும் பெண்கள் மேம்பாட்டு அதிகாரியுடன் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், அவர்கள் இவர்களை பொறுப்பேற்கவில்லை.

இவ்வாறான நிலையில் மீண்டும் நாம் சிறுவர் காப்பகத்தில் விடுவதற்கு நடவடி க்கை மேற்கொண்டோம். இருந்த போதிலும் இக்குழந்தைகளுக்கு பெற்றோர் இருப்பதனால் சிறுவர் காப்பகத்தில் அக்குழந்தைகளை அனுமதிக்க முடியவில்லை. எனவே, நாம் தந்தையுடன் கலந்துரையாடி தாயாருடன் இவர்களது வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பி வைத்திருந்தோம் எனத் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே, நேற்றுக் காலை தாய் தனது மகனை பாடசாலைக்கு அனுப்பி விட்டு பெண் பிள்ளைகளை கிணற்றில் போட்டுத் தானும் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## வடக்கு மாகாண...

வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுக் கொண்டு வந்ததாகக் குறிப்பிட்ட அவர், 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு மேற்கொள்ளும் போது அனைவரது விபரங்களும் சரியான முறையில் ஆய்வு செய்து பதிவேற்றப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை, யுத்தம் காரணமாக வடமாகாணத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக வடமாகாண பிரதித் தேர்தல் ஆணையாளர் சி.அச்சுதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனை அவர் குறிப்பிட்டார்.

யுத்தம் காரணமாக பலர் உயிரிழந்துள்ளதுடன் பலர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் இதனால் வடக்கில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்றார்.

தற்போது வாக்காளர் இடாப்புப் பதியும் நடவடிக்கை கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் ஊடாகவும் வாக்காளர் இடாப்புத் திருத்தத்திற்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் படிவங்களை பொதுமக்கள் விரைவில் பூர்த்தி செய்து 2 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

யூன் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் தேர்தல் திணைக்களத்தினால் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக திகதிகள் அறிவிக்கப்பட்டுப் படிவம் கையேற்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (02)

## முதலீட்டு...

துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இலங்கையின் தைத்த ஆடைகளுக்கு சர்வதேச நாடுகளில் கூடுதலான கேள்வி ஏற்பட்டுள்ளது. எனினும் ஆடைத் தொழிற்சாலைகள் ஊழியர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளன.

இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காகச் செல்வதே இதன் காரணமென முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## தடம்புரண்டது...

யோர் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இவ்விபத்து தொடர்பான விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 13 ஆவது...

உறுதியளித்திருந்தது எனவும், காணி, பொலிஸ் அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட உள்ளதாக தற்போது ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 26 இந்திய மீனவர்கள் விடுதலை குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கேட்ட றிந்து கொண்டதுடன் அவர்களின் விடுதலை தொடர்பாகவும் சட்ட ஏற்பாடுகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர்.

அப்போது, காரைக்கால் மீனவர்கள் 26 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும், நவம்பர் முதல் இலங்கையில் சிறையில் உள்ள மேலும் 5 மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பேச்சுவார்த்தையின் போது, இந்தியா-இலங்கை மீனவப் பிரதிநிதிகள் இவ்விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்தினார்.

## இலங்கையில்...

னங்கள் திட்டமிட்டுள்ளன.

தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் முக்கிய வர்த்தக நாடாக உள்ள இலங்கையில் இருந்து அதன் மொத்த வர்த்தகத்தில் 45 சதவீதத்தை இந்தியா இறக்குமதி செய்கிறது. இந்த ஆண்டுகளில் இலங்கையிலிருந்து இந்தியாவின் இறக்குமதி 16 மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் இலங்கை அதிகம் பயனடைந்துள்ளது.

இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருகின்றன என்று கூறினார்.

# கிராமிய மக்களின் தேவைகள் என்ன?

# வடமராட்சியில் பகுப்பாய்வு



வடமராட்சி பைங்கூரன் கிராம மக்களின் தேவைகள் தொடர்பி லான பகுப்பாய்வுக் கலந்துரையாடலொன்று ஈ.பி.டி.பி.யின் நாடாளு மன்ற உறுப்பினரும், வடமராட்சி ஒருங்கிணைப்புக் குழுத்தலை வருமான சில்வேஸ்திரி அலன் ரின் (உதயன்) தலைமையில் நடைபெற்றது.

நீதிதேவி சனசமூக நிலையத் தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற மேற்படி கலந்துரையாட லின்போது வீதி திருத்தம், வீட் டுத்திட்டம், மலசல கூடங்களின் தேவைகள், வாழ்வாதாரம் உட் பட மக்களின் அடிப்படை பிரச்சி னைகள் உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் தொடர்பில் ஆராயப்பட் டது.

இந்நிகழ்வில் கரவெட்டிப் பிர தேச செயலர் சிவசிறீ, ஈ.பி.டி.பி. யின் கரவெட்டி பிரதேச இணைப பாளர் செந்தில்நாதன் ஆகியோர் கள் கலந்துகொண்டனர்.

# முல்லையில் மருத்துவமுகாம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நடமாடும் மருத்துவசேவை முகாம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வு முல்லை மாவட்ட சுகாதரப் பிராந்திய பணிப்பாளர் அ.திலீபன் தலைமையில் இடம் பெற்றது. இவ் நிகழ்வில் பிரதம விருந்தினர்களுக்கு மலர் மாலை கள் அணிவித்து வரவேற்று தேசி யக் கொடி முல்லை மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் வீரவத்தனா ஏற்றிவைக்க சுகாதர பணிமனையின் கொடிமுல்லை மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றிவைக்கப்பட்டு மருத்துவ சேவை அவர்களால் அரம்பித்து வைக்கப்பட்டு வெளிநோயாளர் பிரிவு கண் பரிசோதனை, இரத்த பரிசோதனை, ஏனைய மருத் துவ சேவைகளும் இடம்பெற் றுள்ளது. இதில் 500 இற்கும் மேற் பட்ட மக்கள் பயன் அடைந்துள் ளனர் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினர்களாக முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்ப ளர் ச.கனகரத்தினம் முல்லை மாவட்ட 59 ஆவது படைப்பிரி வின் பிரிகேடியர் குமுது பிரேட வைத்திய காலநிதி டட்னாயக் கா அகியோரும் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது. (க)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

உகண்டாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று காலை 5.10 இற்கு நாடு திரும்பியுள்ளார்.

உகண்டாவுக்கு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மஹி ந்த ராஜபக்ஷ அங்கு இரு நாடு களுக்கும் இடையிலான நல்லி ணக்கம் மற்றும் அரசியல் இராஜ தந்திர விடயங்கள் பற்றி கலந்து ரையாடினார்.

இந்நிலையில் அவர் நேற்று காலை உகண்டாவின் கம்பாலா நகரில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானமொன்றில் நாடு திரும் பினார்.

## மூன்று குழந்தைகளை பிரசவித்த தாய்மார்

ஒரே தடவையில் தலா மூன்று குழந்தைகளை இரு தாய்மார்கள் பிரசவித்த சம் பவமொன்று நேற்று கொழு ம்பு சொய்சா மகளிர் மருத் துவமனையில் இடம்பெற் றுள்ளது. இவர்களில் ஒரு தாயார் மூன்று ஆண் குழந் தைகளை பிரசவித்துள்ளார். இவ்விரு தாய் மாரும் மினு வன்கொட மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்க ளைச் சேர்ந்தவர்கள் என வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக் கின்றன.

# தகராறு முற்றி அடிதடியில் முடிந்தது

(யாழ்ப்பாபணம்)

யாழ். நகர்ப்பகுதியில் பிரபல அழகுசாதனப் பொருட்கள் விற் பனை செய்யும் வர்த்தக நிலை யம் ஒன்றின் கண்ணாடி அலுமா ரிகள் நொருக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று நண்பகல் நடை பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ். நகரப்பகுதியின் நவீன சந்தைப் பகுதியில் உள்ள அழகு சாதனப் பொருட்கள் விற்கும் வர த்தக நிலையம் ஒன்றிற்கு கொழு ம்பிலிருந்து பொருட்களை விநி யோகித்த நபர்கள் பணம்கேட்டு சென்றவேளை குறிப்பிட்ட வர்த் தகருக்கும் பணம் கேட்டுச்சென்ற நபர்களுக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டு குறித்த வர்த்தக நிலையத்தின் அலுமாரி வந்தவர் களால் அங்கு இருந்த கண்ணாடி அலுமாரி இவ நபர்களால் [illegible]டி த்து நொருக்கப்பட்டதாகத் தெரி விக்கப்படுகின்றது.

# சொத்துக்கள் குவித்தாரா ஷிராணி நேற்றும் தொடர்ந்தது விசாரணை

முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க இலஞ்ச ஊழல் விசாரணைகள் ஆணைகுழு முன்னிலையில் நேற்று ஆஜரானார். சொத்துக்கள் குறித்த விசாரணைகளுடன் தொடர்புடைய வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்று ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டிருந் ததாக ஆணைக்குழுவின் பணியாளர் நாயகம் லமி விஜேயவிக்ரம தெரிவித்தார்.

இதற்கமைய முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னி லையில் வாக்குமூலம்அளித்ததாக அவர் சார்பில் ஆஜராகும் ஜனா திபதியின் சட்டத்தரணி நலின் லத்தூவஹெட்டி தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வு வடக்கு மாகாண தேர்தலா?

## கேள்வி எழுப்புகிறது முன்னணி சோசலிசக்கட்சி

இனப்பிரச்சினைக்கான தீர்வாக வடக்கு மாகாணசபையைக் கருதமுடியாது என்று முன்னணி சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது. வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென முன்னணி சோசலிச கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித் துள்ளார். தெற்கைப் போன்றே வடக்கிலும் மாகாணசபை முறைமை அமுல்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறிமுறைமையாக வட மாகாணசபையைக் கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். எனினும் தெற்கில் மாகாணசபை உருவாக்கப்பட்டால் வடக்கிலும் மாகாணசபை உருவாக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை இனவாதிகள் கோருவதாகவும்இ அதிகாரங்களை இனவாதிகள் மறுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இனவாத அடிப்படையில் தேசிய இனப்பிரச் சினைக்கு தீர்வு காண முடியாது என தெரிவித்துள்ளார். நாட்டின் சகல மக்களின் ஜனநாயக உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண் டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தீயில் கருகி குழந்தை பலி

(கொழும்பு)

மாதம்பை பகுதியில் ஒரு வயதும் 3 மாதங்களேயான குழந்தையொன்று தீயில் அகப்பட்டு உயிரிழந்துள்ளது. தற்காலிகமாக கட்டப்பட்ட வீட்டில் நேற்று முன்தினம் மாலை தீ பிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தானை வீழ்த்தியது ஹைதராபாத்

(சென்னை)

ராஜஸ்தான் றோயல் அணி யை 23 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வீழ்த்தி ஹைதராபாத் சன ரைசர்ஸ் அணி வெற்றியீட்டியுள் ளது.

நேற்று இரவு 8.00 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கைதராபாத் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய ராஜஸ்தான் அணி 20 ஓவ ர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப் பிற்கு 113 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதனால் 23 ஓட் டங்களால் ஹைதராபாத் அணி யிடம் தோல்வியைக் கண்டது ராஜஸ்தான் அணி.

க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடையாவிட்டாலும்...

மலேசிய SEGI பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்று LONDON பல்கலைகழக்கழகச் சான்றிதழுடன் மாதம் 50,000 /= வருமானமும் தரும்

(C/2528)

ஹொட்டேல் பயிற்சிநெறி

* பயிற்சிநெறி முடிவில். வேலைவாய்ப்பும், singapore, Australia மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும்.

* இலவச 3 மாத ஆங்கில வகுப்பு

3 ஆம் அணி மாணவர்கள் மே 21 இல் பயணம் - 4 ஆம் அணி விரைவில் பயணம்

5 ஆம் அணியில் இணைந்துகொள்ள உடனே அழையுங்கள்

சிகரம் SIKARAM MEDIA & EDUCATION கல்வி - தொழில் வழிகாட்டி

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)

தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798

மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk

# வெள்ளம் இழுத்துச் சென்றவர்கள் நேற்றுச் சடலங்களாக மீட்பு

நுவரெலியா மாவட்டத்தில் வெள் ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட ஆணொருவரினதும் பெண்ணொரு வரினதும் சடலங்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். 40 வயதுடைய கமலேஸ்வரி மற்றும் 70 வயதுடைய ராமசாமி கிருஸ்ணன் ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட் டுள்ளன.

கடந்த 13 ஆம் திகதி பெய்த கடும் மழையைத் தொடர்ந்து இவர் கள் இருவரும் வெள்ளத்தில் அடித் துச் செல்லப்பட்டிருந்தனர். இந்நிலை யிலேயே இவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் சடலமொன்று கரையொதுங் கியதை கண்ட பிரதேசவாசிகள் பொலிஸாருக்குத் தகவல் வழங் கினர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த ஹட் டன் பொலிஸார் 40 வயதான இப்பெண்ணின் சடலத்தை மீட் டுள்ளனர். டிக்கோயா நகரத்து க்கு அருகிலுள்ள குடியிருப் பொன்றில் வெள்ளநீர் புகுந்ததி னால் வெள்ளத்தில் இப்பெண் இழுத்துச் செல்லப்பட்டிருந்தார்.

இவரது சடலம் பிரேத பரி சோதனைக்காக டிக்கோயா கிளங் கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை, லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரட்ண கிரி தோட்டத்திலுள்ள ஆற்றோ ரத்தில் நின்றுகொண்டிருந்த போது, வெள்ளத்தில் 70 வயதான குடும்பஸ்தர் இழுத்துச் செல்லப் பட்டிருந்தார்.

இவரது சடலத்தை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் தல வாக்கலை சுமண சிங்கள பாட சாலைக்கு அருகிலிருந்து தல வாக்கலை பொலிஸார் மீட்டுள்ள னர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.